Registered as a news paper.
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

அரிய சந்தர்ப்பம்

**Hardware மற்றும் Network**
**முடித்தவர்களுக்கானது**

Hardware Engineer's (Trainee)
Network Engineer's (Trainee)

எமது தாயக மண்ணில் வல்லுனர்களை உருவாக்கும் நோக்குடன் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

சம்பளத்துடன் கூடிய முழுநேரப் பயிற்சி நெறி.
கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது.
முழு விபரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

UNIT

347, KKS Road, Near by Manohara Theatre, Jaffna.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மாசி – 27 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 29 (11.03.2005) வெள்ளிக்கிழமை இதழ்:162

## குடாநாட்டு மக்கள் மீதான

# இராணுவ நெருக்கடிகளை தளர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்!

## கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் இளம்பரிதி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக குடாநாட்டு மக்கள் மீது அதிகரித்துவரும் இராணுவ நெருக்கடிகளை உடனடியாகத் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டிடம் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கோரிக்கை விடுத்தார்.

இரண்டு நாள் விஜயமாக நேற்றுமுன்தினம் யாழ். குடாநாட்டுக்கு விஜயம்செய்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட், நேற்றுக் காலை 11 மணியளவில் யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்துக்கு விஜயம் செய்தார். அங்கு இடம்பெற்ற சந்திப்பின்போதே இளம்பரிதி இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது –

சுனாமிக்கு முன்னர் இராணுவப் புலனாய்வாளர்கள், மக்கள் மத்தியில் சென்று யுத்தம் ஆரம்பமாகப் போகின்றது. புலிகளின் பின் நீங்கள் செல்லக்கூடாது என அச்சுறுத்தியிருந்தனர். இதைவிட சமாதான காலத்துக்கு முன்னர் யாழ். (12 ஆம் பக்கம் பார்க்க)



சந்திப்பை முடித்து வெளிவரும் கண்காணிப்புக்குழுத் தலைவர்



## வயோதிப மாதுவை சிப்பாய் வல்லுறவுக்குட்படுத்த முயற்சி!

### பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்: காவலரண் எரிப்பு!

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் வீடொன்றுக்குள் புகுந்து வயோதிபப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்ததை அடுத்து – அந்தப் பகுதி மக் [illegible]

படுத்த முயற்சித்ததுடன் அவரைக் கொலை செய்யவும் எத்தனித்துள்ளார்.

அறைக்குள் இழுத்துச்சென்று வாய்க்குள் துணியொன்றை வைத்து அடைத்துவிட்டு அவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த இரா [illegible]

## புலிகளின் உயர்மட்டக்குழு ஐரோப்பா பயணமானது!

(கொழும்பு)

தமிழீழ அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்றுக்காலை 9.20 மணியளவில் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட்டுச்சென்றனர்.

இவர்கள் நோர்வே, சுவீடன், பின்லாந்து, நெதர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, அயர்லாந்து மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

சுனாமியால்பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக் [illegible]





# வயோதிப மாதுவை சிப்பாய் வல்லுறவுக்குட்படுத்த முயற்சி!

## பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்: காவலரண் எரிப்பு!

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் வீடொன்றுக்குள் புகுந்து வயோதிபப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்ததை அடுத்து – அந்தப் பகுதி மக்கள் ஒன்றுதிரண்டு இராணுவ முகாம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், இராணுவக் காவலரண் ஒன்றையும் தீயிட்டெரித் தனர்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது –

நேற்று நண்பகல் நீர்வேலி வில்லுமதவடிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு அண்மையிலுள்ள வீடொன்றுக்குள் திடீரெனப் புகுந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், 63 வயதான பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்ததுடன் அவரைக் கொலை செய்யவும் எத்தனித்துள்ளார்.

அறைக்குள் இழுத்துச்சென்று வாய்க்குள் துணியொன்றை வைத்து அடைத்துவிட்டு அவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த இராணுவச் சிப்பாய் முயன்றுள்ளார். மேற்படி பெண் கத்தியபோது அவரைக் கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்.

இதனையடுத்து மேற்படி பெண் மீண்டும் கத்தியபோது சத்தம்கேட்டு அயலவர்கள் சம்பவ இடத்துக்கு வந்தனர். இதையடுத்து சிப்பாய் தப்பிச்சென்றுவிட்டார்.

அவரை அந்தப் பகுதி மக்கள் துரத்திச் சென்றபோது பஸ் ஒன்றில் ஏறிச்சென்று இராணுவ முகாமொன்றுக்குள் தஞ்சமடைந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் உயர்மட்டக்குழு ஐரோப்பா பயணமானது!

(கொழும்பு)

தமிழீழ அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்றுக்காலை 9.20 மணியளவில் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட்டுச்சென்றனர்.

இவர்கள் நோர்வே, சுவீடன், பின்லாந்து, நெதர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, அயர்லாந்து மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

சுனாமியால்பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்கைச் சேர்ந்த மக்களுக்கான நிவாரணங்களை நேரடியாகவும் செயற்திறன் மிக்க முறையிலும் பகிர்ந்தளிப்பது குறித்து இந்த விஜயத்தின் போது கலந்துரையாடப்படவுள்ளதாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கூறினார்.

இந்த விஜயத்தின் ஒரு கட்டமாக பிறஷல்ஷில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகத்திற்கும் இவர்கள் விஜயம் செய்வார்கள்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தலைமையில் – தமிழீழ காவல்துறைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞானம் விநாசியர்



சீசனுக்கு சீசன் ஆரையாவது வெளியேறச் சொல்லி ஊர்வலம் நடத்துறதுதான் ஜே.வி.பியின்ர வாடிக்கையா போச்சு...!

# உலகவங்கி பிரதிநிதிக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

இலங்கைக்கான உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்டிற்கு எதிராக நேற்று கொழும்பில் அமைந்துள்ள உலகவங்கி கட்டடத்திற்கு முன்னால் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைமையில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து காலிமுகத்திடல்வரை நடைபெற்றது. இந்த எதிர்ப்பு ஊர்வலத்திற்கு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தலைமை தாங்கினார். வண. எல்லே குணவன்ச தேரோவும் கலந்து கொண்டார்.

சுமார் மூவாயிரம் பேர் வரையானோர் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். இவர்கள் அனைவரும் பீற்றர் ஹரோல்டிற்கு எதிரான சுலோகங்களைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இறுதியில் ஆர்ப்பாட்டக்காரர்களால் கொண்டுவரப்பட்ட பீற்றர் ஹரோல்டின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

இந்த ஊர்வலத்தின் நிறைவில் உரையாற்றிய எல்லே குணவன்ச தேரர், உலக வங்கிப் பிரதிநிதி உள்நாட்டு விடயங்களில் தேவையற்றவிதமாகத் தலையிடுகின்றார். இதன்மூலம் இலங்கையின் இறைமை பாதிப்படைகின்றது எனத் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய விமல் வீரவன்ச, பீற்றர் ஹரோல்டின் கருத்தினை, கருத்திலெடுத்து அவரை நாட்டைவிட்டு உடனடியாக வெளியேற்றுமாறு அரசாங்கம் உத்தரவிட வேண்டுமெனத் தெரிவித்தார்.



வவுனியா கல்வியியற் கல்லூரிக்கு

# தெரிவான மேலும் ஒரு தொகுதி மாணவர்களின் விபரங்கள்!

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கிறிஸ்வத நாகரிகம், உடற்கல்வி மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வெளியாகியுள்ளது.

இதேவேளை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்ளுக்கு தெரிவான மணவர்கள் அனைவரையும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு சமுகமளிக்கும்படி பீடாதிபதி கேட்டுள்ளார்.

**கிறிஸ்தவநாகரிகம்**

மரிய விஜித்தா (மட்டக்களப்பு), மரியவசந்தி (கரவெட்டி), மரிய தாரணி (மன்னார்), றோஸ்மேரி (வவுனியா), ஜெசிகா அல்பேட் பற்றிக் (பெரியபண்டி விரிச்சான்மடு), குமாரநாயகம் தனுசா (ஆரையம்பதி), றோசை விஜயதர்ஷினி (மட்டக்களப்பு), கிறிசோஸ்தம் அனஸ்டா (கல்முனை), ஞானப்பிரகாசம் குருஸ் முத்து யசோதா (முல்லைத்தீவு), லக்ஸ்மணலிங்கம் மேரிலின்சியா (யாழ்ப்பாணம்), செல்வராஜ் ஜெசிந்தா மேரி (அப்புத்தளை), மனுவல் நிலோஜினி (கலட்டி), மெற்றலின் ராஜினி கிறிஸ்துநாயகம் (நெடுந்தீவு), வியாகுலநாயகம் ஜெஸ்ரினா (யாழ்ப்பாணம்), பிரேமிளா சூசை (மன்னார்), தேவதாஸ் ஜெனார்த்தனி குலாஸ் (மன்னார்), ஒஸ்ரின் வத்சலா பிரான்ஸிஸ் சேவியர் (கொக்குவில்), அருளானந்தம் அனித்தா (யாழ்ப்பாணம்), பதின்ஸ்தன் ஏஞ்சலோ பேஜின் (உரும்பிராய்), ஜெனிஸ்ரா கபிரியேல் (உரும்பிராய்), ஜிவாஜினி சாமிநாதன் (நெடுந்தீவு), சர்மிளா ஜமிஸ்டாஸ் (யாழ்ப்பாணம்), சந்திரிகா யேசுதாசன் (நெடுந்தீவு), அஞ்சலா ஷியானி வில்லியம் (கல்முனை), முதலியப்பன் றோஸ்லின் றெஜினா (வவுனியா), செல்வராஜா பிறேமலதா (நட்டாங்கண்டல்), இமானுவேல் புஸ்பராஜன் டயானா டென்சி (கட்டைக்காடு), பாலசிங்கம் கிரிஷாந்தி சிந்துஜா (கல்முனை).

**உடற் கல்வி**

எ.அகிலன் (அன்புவெளிபுரம்), எஸ்.பி.திவாகரன் (நீதிமன்ற வீதி), எஸ்.பீற்றர்சன் (எழுதூர்), எவ்.கிரிசாந்தி (ஜோசப் பெண்கள் விடுதி), என்.சுரேஸ்குமார் (கிரான்குளம்), இ.புவீந்திரகுமார் (தேற்றாத்தீவு), கே.வினோஜிதா (தண்ணீரூற்று), என்.ஜெயதீபன் (திருகோணமலை), கியூ.சி.சஞ்சீவன் (நியூ வன்னியாஸ் வீதி), எஸ்.மிருநாளினி (மத்தியூஸ் வீதி), எஸ்.கஜேந்தினி (மத்தியூஸ் வீதி), எஸ்.கவிதா (ஞானசூரியம் விடுதி), ஏ.ஜே.சூசை (வங்காலை), ஜே.அகஸ்ரின் (வட்டக்கண்டல்), பி.எஸ்னா (அம்பலாந்துறை வடக்கு), ஆர்.ராஜகாந்தன் (பன்னாலை), ஆர்.கண்ணா (மணிக்கூட்டு வீதி), எஸ். கார்த்திகா (அராலிமத்தி), பி.ராதா (ஆடியபாதம் வீதி), கே.கமலவேணி (நீர்வேலி), ரி.கணேசமலர் (கல்மடு), பி.திருநேசன் (டெமிரியா குறாப்), ரி.இலட்சுமி (விஸ்வகுள வீதி),

**விவசாயம்**

ரி.ராஜாஜி (வவுனியா), வி.மிஜராஜினி (வவுனியா), எம்.ஆர்.ஆர்.பாவீன் (புத்தளம்), ரி.ஜனனி (மட்டக்களப்பு), எஸ்.மதுரா (மட்டக்களப்பு), எம்.சட்.ஹச்சானா பார்வ்ம் (கிண்ணியா), ஏ.ஜே.பாத்திமா ரிஸ்மா (காரதீவு), ஆர்.ராகவன் (கிளிநொச்சி)

# இரு விபத்துக்களில் இருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகருக்கு அண்மையில் மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து ஒருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் - அக்கராயனைச் சேர்ந்த எதிர்மறைசிங்கம் ( வயது 30) என்பவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

விபத்தில் காயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரியவருகிறது.

மற்றும் வீதியைக் கடக்க முயன்ற வயோதிபர் மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் அல்வாய் கிழக்கு ஆலடிப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது - தனது வீட்டிற்கு முன்பாக இருந்த கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கிக்கொண்டு மீண்டும் வீடுதிரும்புவதற்காக வீதியைக் கடக்க முற்பட்ட போதே வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் இவரை மோதியது.

இந்தச் சம்பவத்தில் அல்வாய் கிழக்கு ஆலடியைச் சேர்ந்த செல்லையா சிவப்பிரகாசம் (வயது 64) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

# கோதுமை மா 30 ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்களின் கோதுமைமாவின் நுகர்ச்சித் தேவையை கருத்தில்கொண்டு அதன் விலை அதிகரிப்பை தீர்க்கும் முகமாக இறக்குமதி செய்த மாவை யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அனைத்துபலநோக்குக் கூட்டறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகித்து வருகிறது.

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மாவின் ஆகக்கூடிய சில்லறை விலையாக ரூபா 30 ஐ நிர்ணயித்துள்ளது.

அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் மேற்குறிப்பிட்ட விலையைப் பின்பற்றுமாறு சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் கேட்டுள்ளார்.

# தையல் இயந்திரங்கள் இன்று வழங்கப்படும்

(கோப்பாய்)

வலி.கிழக்கு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கையாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வழங்கு வதற்காக மாவட்ட புனர்வாழ்வு நல்லிணக்க செயலகத்தினால் வலி. கிழக்கு பிரதேச செயலகத்துக்கு 21 தையல் இயந்திரங்களும் ஏனைய தையல் உபகரணங்களும் 2004 ஆம் ஆண்டு அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

இவை தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வலி. கிழக்கு பிரதேச செயலகத்தில் வைத்து இன்று வழங்கப்படவுள்ளது.

(90)

# கரப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப்பேட்டி இன்று ஆரம்பமாகவுள்ளதாக யாழ். கல்வி [illegible] விளையட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கேப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நடத்தி முடிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.


**மனோகரா** திரையரங்கு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
மாறுபட்ட வேடங்களில் சூர்யா, ஜோதிகா மற்றும் பலர் நடித்த **மாயாவி**
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்
சரத்குமார், நமீதா, வடிவேலு, கபாலி நடித்த **ஏய்**
11.00, 3.00, 7.00, 10.00

**ராஜா** யாழ்ப்பாணம்
இன்று மட்டும் சிம்பு (இரு வேடம்), ஜோதிகா கவுண்டமணி நடித்த **மன்மதன்**
12.03.2005 முதல் புதிய வெளியீடு
பிரசாந், வடிவேல், **லண்டன்**
(சி-3859)
கா.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
11.3.2005 முதல் லியோனாட் - டிக் அப்பினோ - கேள் நடித்த **டைட்டானிக்** கா.நே(பு.நே) 10.30 2.30
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க திரையிடப்படுகின்றது.
றஜினி - அம்பிகா நடித்த **நான் சிவப்பு மனிதன்** கா.நே(பு.நே) 6.30 9.30
(சி-3857)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
விஜய், திரிசா நடித்த **திருப்பாச்சி**
(சி-3856)
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)



# ENGLISH CAMP 2005

Vembadi Girls High School
Dare to Do Right

## J/ VEMBADI GIRLS' HIGH SCHOOL

(c/3890)

*With the best Compliments from*

Mr.S.Sanmuganathan
Navaly South, Manipay

Tellipalai MPCS,
Tellipalai

Nadaraja Stores
64, Hospital Road, Jaffna.
T.P : 222 3854

Mrs I.Ramachandra
Lecturer of English
Palaly Teachers' College.

Saranga Padamadam
K.K.S. Road, Jaffna.

Kanapathy Communication,
Palaly Road, Thirunelvely.

Sri Mathana Jewellery
Kasthuriyar Road,
Jaffna.

K.K.Phone Service
No 1, New Market,
Jaffna.

Kirushna Pawning Brokers
370, K.K.S. Road, Jaffna.
T.P : 5046

Karan Watch and Radio
Repairers and Dealers
91, Kasthuriyar Road,
Jaffna.

Mangala Furniture Mart
153, K.K.S. Road, Jaffna.

D.M.I.
Stanley Road, Jaffna.

Inuvai
Kanaga Thayaparan
Fancy Palace
64, Kasthuriyar Road, Jaffna.

Harikanan Printers
424, K.K.S. Road, Jaffna.

T.Rasiah and Sons
23/10, Stanley Road, Jaffna.

Yarlton Multi Centre,
No 48, Kasthuriyar Road,
Jaffna.

Media Sponsored by: ஈழநாடு Namathu Eezhanadu Navalar Road, Jaffna.

# சந்திப்புக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உரியமுறையில் அமுல்படுத்தப்படவில்லை!

## மட்டு.அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சந்திப்புகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உரியமுறையில் அமுல்படுத்தப்படவில்லை என மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பானு குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் –

இந்தச் சந்திப்புக்கு தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக விருந்த கௌசல்யன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவக் முகாமுக்கு அண்மையில் படுகொலைசெய்யப்பட்டதையும் நினைவுபடுத்தினார்.

ஏற்கனவே சந்திப்புக்களின் போது எடுக்கப்பட்ட முடிவுகளை அமுல்படுத்துவதில் படைத்தரப்பு அசமந்தப்போக்கைக் கடைப் பிடித்து வந்தது. இதன் காரணமாகவே கௌசல்யன் போன்ற எமது போராளிகளை நாம் இழந்துள்ளோம். இப்படியான சந்திப்புக்கள் மூலம் எதிர்காலத்தில் அனுகூலமான முடிவுகளைப் பெறமுடியுமானால் சந்திப்புகளை நடத்தலாம்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை தற்போது உள்ளது. இந்த நிலையில் வேலைத்திட்டங்களை முனைப்பாக முன்னெடுக்க வேண்டியுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிரதேசம் என்பதால் எமது போராளிகள் சுதந்திரமாக நிவாரணப் பணிகளிலோ அல்லது மீள்கட்டுமானப் பணிகளிலோ ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# தொண்டர்படைகளின் தளபதி வன்னிநிலை குறித்து ஆராய்வு



(வவுனியா)

இராணுவ தொண்டர் படைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி – வவுனியா மற்றும் வெலி ஓயா பகுதிகளுக்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகள் குறித்து உயர்மட்ட படைத் தளபதிகள் மற்றும் படையினருடன் ஆலோசனை நடத்தியதாகத் தெரியவருகிறது.

கொக்குவெளியிலுள்ள கொமோண்டோ பயிற்சிப் பாடசாலைக்கு விஜயம்செய்த மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி – அங்கு பயிற்சிபெறும் சிப்பாய்களுடன் கலந்துரையாடியதுடன், அவர்களின் தேவை குறித்துக் கேட்டறிந்தார்.

குறிப்பாக அண்மையில் இங்கு பயிற்சிபெற்ற படையினருக்கு சி.4 வெடிமருந்தை உண்ணக் கொடுத்ததால் படையினர் சுகவீனமுற்ற சம்பவம் மற்றும் அதற்குக் காரணமான கோப்ரல் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் ஆகியன குறித்தும் இவர் அங்கு படையதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

கொக்குவெளியில் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதன்பின்னர் வன்னிப் பாதுகாப்புப்படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவுடன் – மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி வெலிஓயா பகுதிக்கு விஜயம்செய்து முன்னணிப் பாதுகாப்பு நிலைகளின் பாதுகாப்புக் குறித்து ஆராய்ந்தார்.

அத்துடன் – வெலிஓயாவில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் பிரதேச இராணுவத் தலைமையகக் கட்டடத்தையும் அவர் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# நிவாரணத்தில் புறக்கணிப்பு; திருமலையில் மறியல் போர்!

(திருகோணமலை)

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சிறிமாபுரம், விஜிதபுரம், ஜமாலியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் – தமக்கு சுனாமி பாதிப்பு நிவாரணப் பொருட்கள் தொண்டர் நிறுவனங்களால் வழங்கப்படும்போது புறக்கணிக்கப்படுவதாகக் கூறி வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை 7 மணி தொடக்கம் வீதிக்குக் குறுக்காக அமர்ந்திருந்து போக்குவரத்தைத் தடைசெய்து போராட்டத்தை நடத்தினர்.

இதன்காரணமாக ஏகாம்பரம் வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டது. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் நான்கு கிலோமீற்றர் தூரம் சுற்றியே பாடசாலைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

அரசாங்கம் வழங்கும் உதவிப் பொருட்கள் தமக்குக் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதைக் கண்டித்து கடந்த மாதம் நடுப்பகுதியிலும் இவ்வாறான ஒரு போராட்டத்தை அவர்கள் நடத்தியிருந்தார்கள்.

தற்போது தொண்டர் நிறுவனங்களின் சேவையில் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாகக் கூறியே அவர்கள் போராட்டத்தை மேற்கொண்டனர். இந்த விடயம் தொடர்பாக பட் டணமும் சூழலும் பிரதேச செயலருக்கும், அரசாங்க அதிபருக்கும் மகஜர்களை வழங்கினர்.

இதேவேளை –

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

200 மீற்றர் கடல் வலயப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்துச்செய்து பழைய இடத்தில் தங்களை குடியமர்த்தக் கோரியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மூதூர் இறங்குதுறையிலிருந்து பிரதேச செயலகம் வரை இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. (04)

# அனர்த்தமுகாமைத்துவ சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேறியது!

(கொழும்பு)

இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்தின் மீதான இரண்டாவது வாக்கெடுப்பு 40 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 57 வாக்குகளும், எதிராக 17 வாக்குகளும் கிடைத்தன. ஐ.தே. கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து வாக்களித்தது.

விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண இந்த சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் –

இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் அழிவுகளைக் குறைக்கும் வகையில் குறுகிய மற்றும் நீண்ட காலத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார். அத்துடன், மீண்டும் சுனாமி ஆபத்து ஏற்படுமென இந்திய விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய உரையாற்றுகையில் –

உத்தேச அனர்த்த முகாமைத்துவக் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட இரண்டு கட்சிகளின் இரண்டு பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும். இதனை நிறுவுவது தொடர்பாக மக்களின் கருத்துக்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும் எனத் தெரிவித்தார்.

# புதிதாக எட்டு மாவட்டங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள்

(கொழும்பு)

எட்டு மாவட்டங்களில் நடமாடும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை செயற்படுத்துவதற்கு 18 ஆவது அரசியல் அமைப்பு சட்டமூலத்திற்கான திருத்தத்தை முன் வைப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நடமாடும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கு நீதியரசர்களை நியமிக்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவருக்கு வழங்கப்படவேண்டும் என்ற திருத்தம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இது குறித்து ஆராய்வதற்காக கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது என்றும், இந்தக் கூட்டத்தில் இது பற்றி ஆராயப்படும் என ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

## இந்தவருட முடிவுக்குள் சீருடைத்துணி

அடுத்த வருடத்துக்கான பாடசாலை சீருடைத் துணிகளை இந்த வருடம் முடிவதற்கு முன் வழங்கும் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த வருடத்துக்கான துணி வகைகள் உள்ளூரில் தயாரிக்கப்பட்டவை. மூலப்பொருட்கள் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்டன. துணிவகைகள் தயாரிப்பதற்கு 133 கோடி ரூபாவுக்கு அதிகமான தொகை செலவு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# சுனாமியால் 10 மில்லியன் டொலர் சிறிலங்கன் எயர்லைன்ஸுக்கு நட்டம்

சுனாமி அனர்த்தம் மற்றும் எரிபொருள் விலை உயர்வால் சிறிலங்கன் எயர்லைன்ஸுக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர் அளவில் நட்டம் ஏற்படக்கூடும் என்று நிறுவன அதிகாரி சந்தன டி சில்வா தெரிவித்தார்.

ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்குக்கான வாராந்த விமான சேவையை அதிகரிக்கவுள்ளதாவும், இந்தமாத இறுதியில் நியூயோர்க்கிற்கான நாளாந்த சேவையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும்கூறினார்.

அதேபோல் பாங்கொக் வழியாக பீஜிங்கிற்கு வாரத்தில் மூன்று நாட்கள் விமான சேவையும் விரைவில் தொடங்கப்படவுள்ளது. சுனாமி அனர்த்தத்துக்கு முன்பாக 2 எயர் பஸ் மற்றும் ஏ–320 விமானங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு எடுப்பது தொடர்பான முடிவு கைவிடப்பட்டுள்ளது.

1500 தொன் அளவிலான சுனாமி அனர்த்த நிவாரணப் பொருட்களை எயர் லைன்ஸ் நிறுவனம் சரக்குக் கட்டணமின்றி எடுத்துச்சென்றது.

சிறிலங்கன் எயர் லைன்ஸ் 60 வீத பங்கு அரசாலும், 40 வீத பங்கானது டுபாயை மையமாகக் கொண்ட எமிரேட்ஸ் எயர் லைன்ஸாலும் நிர்வகிக்கப்படுகிறது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரித்தாஸ் நிறுவனம் உதவவுள்ளது!

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு பிரான்ஸை மையமாகக்கொண்டு இயங்கும் கரித்தாஸ் சர்வதேச நிறுவனம் முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் குடியிருப்புகளை இழந்தவர்களுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு வீடுகளைக்கட்டிக் கொடுக்கப்போவதாகவும் – கடற்தொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கவுள்ளதாகவும் நிறுவனத்தின் செயற்திட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் உரையாற்றுகை:யில் –

கியுடெக் நிறுவனத்தோடு இணைந்து தமது பணிகளைச் செயற்படுத்திவருவதாகவும், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்காலிக வீடுகள் அமைக்கும் திட்டங்கள் பற்றியும், மீனவர்களுக்கு ஆயிரம் கண்ணாடி இழைப் படகுகளை பகிர்ந்தளிப்பது பற்றியும் கரித்தாஸ் நிறுவன மேலதிகாரி விளக்கிக் கூறினார்.

அத்துடன் வீடமைப்புத் திட்டங்களும் இரண்டு வருடங்களுக்குள் பூர்த்தியாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பல்கலைக்கழக அனுமதிக்காக வேறு பரீட்சை நடத்தப்படமாட்டாது

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்காக வேறு பரீட்சை நடத்த தீர்மானிக்கவில்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்துக்கு அப்பால் வேறு பரீட்சை நடத்த விருப்பதாக வெளியான வதந்திகளை முற்றிலும் நிராகரிப்பதாகவும் – இந்த வதந்திகள் பொது மக்களையும், மாணவர்களையும் திசை திருப்பும் நோக்கில் பரப்பப்பட்டவை எனவும், இவை அரசியல் ஆதாயம் தேடும் நோக்கமாக இருக்கலாம் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு கையளித்த வீடுகள் வசிப்பதற்கு உகந்தவையல்ல

அரசசார்பற்ற நிறுவனங்களும், சில அரசியல்வாதிகளும் சுனாமி அனர்த்தத்தால் வீடுகளை இழந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு அமைத்துக்கொடுத்த வீடுகள் வசிப்பதற்கு உகந்தவை அல்ல என கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் சந்திரசேன விஜயசேகர குற்றஞ் சாட்டியுள்ளார்.


அரசாங்கத்தின் சில நிறுவனங்கள் செயற்திறன் இல்லாத காரணத்தால் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வீடுகளை அமைக்கும் திட்டம் தாமதமடைந்துள்ளது.

மீனவர்களை கரையோரப் பிரதேசத்துக்கு அப்பால் குடியமர்த்தக்கூடாது. அவர்களுக்குத் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியான காணிகள் தெரிவுசெய்யப்பட்டு அங்கு வீடமைத்துக் கொடுக்கப் படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

## மொஹாலி டெஸ்ட்

# டெண்டுல்கரின் சாதனை நழுவியது!

# ஷேவாக் 173 ஓட்டங்கள் குவிப்பு!



மொஹாலியில் நடைபெற்று வரும் இந்திய – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று – இந்திய அணி முதல் இனிங்ஸில் 6 விக்கெட் இழப்பு 447 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாவது நாள் ஆட்டநேரமுடிவில், இந்திய அணி 40 ஓவர்களில் 1 விக்கெட் இழப்புக்கு 184 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஷேவாக் 95 ஓட்டங்களுடனும், ராவிட் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

3ஆவது நாள் ஆட்டம் நேற்று தொடர்ந்தது. நேற்றுமுன்தினம் மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டிருந்ததால் காலை 10 மணிக்குத் தொடங்கவேண்டிய ஆட்டம் 30 நிமிடங்கள் முன்னதாக 9.30 மணிக்குத் தொடங்கியது.

ஷேவாக்கும், ராவிட்டும் தொடர்ந்து ஆடினார்கள்.

போட்டி தொடங்கிய சிறிது நேரத்தில், வீரேந்தர் ஷேவாக் சிறப்பாக விளையாடி சதமடித்தார். அவர் 129 பந்துகளில் 12 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் 100 ஓட்டங்களைத் தொட்டார். அப்போது இந்திய அணியின் ஸ்கோர் 193ஆக இருந்தது.

அதனைத் தொடர்ந்து ராவிட் தனது அரைச் சதத்தை அடித்தார். அவர் 116 பந்துகளில் அரைச் சதத்தை அடித்தார். 50 ஓட்டங்கள் எடுத்த பின்னர் அடுத்த பந்தில் ராவிட், மொகமட் சமி வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து ஷேவாக்குடன் டெண்டுல்கர் ஜோடி சேர்ந்தார். அதுவரை நிதானமாக விளையாடிய ஷேவாக், பின்னர் அதிரடியாக விளையாடினார். டெண்டுல்கரும் அதிரடியாக விளையாடினார். இதனால் இந்தியாவின் ஸ்கோர் மளமளவென உயர்ந்தது. ஷேவாக் 150 ஓட்டங்களைக் கடந்தார்.


மதிய உணவு இடைவேளைக்குப் பின்பு டெண்டுல்கர் 80 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் அரைச் சதத்தைத் தொட்டார்.

தொடர்ந்து சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்த ஷேவாக், 173 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை ரசாக் கைப்பற்றினார். ஷேவாக் 244 பந்துகளில் 19 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 173 ஓட்டங்களை எடுத்திருந்தார். அப்போது இந்தியாவின் ஸ்கோர் 334 ஓட்டங்களாக இருந்தது. 3ஆவது விக்கெட் ஜோடி 118 ஓட்டங்களை எடுத்தது.



நான்காவது விக்கெட்டுக்கு டெண்டுல்கருடன், கப்டன் கங்கூலி ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாகவும், அதே சமயத்தில் மெதுவாகவும் விளையாடினார்கள். அதனால் இந்தியாவின் ஸ்கோர் மெதுவாக உயர்ந்தது.

இந்திய அணி– ஸ்கோர் 381 இருக்கும்போது 21 ஓட்டங்கள் எடுத்தநிலையில், கனேரியாவின் பந்துவீச்சில் சல்மான் பட்டிடம் பிடிகொடுத்து கங்கூலி ஆட்டமிழந்தார். கங்கூலி 74 பந்துகளில் இந்த ஓட்டங்களை எடுத்தார். இதில் 2 பவுண்டரிகள் அடங்கும். அதனைத் தொடர்ந்து லக்ஸ்மன், டெண்டுல்கருடன் ஜோடி சேர்ந்தார்.




டெண்டுல்கர் நிதானமாக விளையாடி சதத்தை நோக்கி நகர்ந்தார். ஸ்கோர் 417 ஓட்டங்களாக இருக்கும்போது, 94 ஓட்டங்கள் எடுத்தநிலையில், நவீட் உல் ஹசனின் பந்துவீச்சில் அசீம் கமலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 202 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். இன்னும் 6 ஓட்டங்கள் எடுத்து 35ஆவது சதம் அடித்திருந்தால், உலக சாதனை படைத்திருக்க முடியும். இதனால் உலக சாதனை கைநழுவியது.

அடுத்து லக்ஸ்மனுடன் தினேஷ் கார்த்திக் ஜோடி சேர்ந்தார். கார்த்திக் 6 ஓட்டங்கள் எடுத்தநிலையில், சமியின் பந்துவீச்சில் நவீட் உல் ஹசனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

மூன்றாவது நாள் ஆட்டமுடிவில் இந்தியா 447 ஓட்டங்கள் எடுத்துள்ளது. பாகிஸ்தானவிட இந்தியா முதல் இனிங்ஸில் 135 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. கைவசம் 4 விக்கெட்டுக்கள் உள்ளன.

லக்ஸ்மன் 33 ஓட்டங்களுடனும், பதான் 1 ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர்.

## சதுரங்கப் புதிர்



**இன்றைய கேள்வி:**

கறுப்பு நகர்த்தலை செய்து இரு நகர்த்தல்களுக்குள் Mate ஆக்குவதை தருக.


*(விடை நாளை)*

**நேற்றைய கேள்விக்கான விடை:**

1... $Nd_3$ + 2.. $Kd_1$ $e_2$ Check mate

**தொகுப்பு - சி. வித்தியாதரன்.**

# அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட்: நியூஸிலாந்து அணி 265 ஓட்டங்கள்!



அவுஸ்ரேலிய – நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில்–முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது.

கிறிஸ்ட்சேர்ச்சில் ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் – நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் நியூஸிலாந்தை துடுப்பெடுத்தாட அழைத்தது.

கமிங் – பிளெமிங் ஜோடி ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். இவர்கள் இருவரும் ஆடிக்கொண்டிருந்தபோது – ஸ்கோர் 56ஆக இருந்தபோது, பிளெமிங் 18 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இதையடுத்து மார்ஷல் களமிறங்கி அணியை பலமான நிலைக்குக் கொண்டுசென்றார்.

ஸ்கோர் 153ஐ எட்டியபோது – இரண்டாவது விக்கெட்டாக கமிங் வீழ்த்தப்பட்டார். இவர் 10 பவுண்டரிகளுடன் 74 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்துவந்த வின்சென் 27 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்க, அஸ்ரில் களமிறங்கினார்.

94 ஓவர்கள் நிறைவில் முதல் நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது – நியூஸிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 265 ஓட்டங்களை எடுத்திருந்தது.



மார்ஷல் 198 பந்துகளில் 14 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 103 ஓட்டங்களைப் பெற்றநிலையிலும், அஸ்ரில் 29 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


பந்துவீச்சில் கஸ்பரோவிச், வோன், கிளார்க் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

# ‘வீரர்களின் போர்’ - இன்று ஆரம்பம்

விளையாட்டு

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கும் இடையிலான வருடாந்தம் நடைபெறும் – வீரர்களின் போர் (Battle of Heroes) மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகி நாளைவரை நடைபெறவுள்ளது.

மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது



மகாஜனாகல்லூரி அணி

வலமிருந்து இடமாக –
சிறிதரன் – பயிற்றுநர்
ஜெயப்பிரியன் – வலதுகை ஆட்டக்காரரும், சுழல் பந்து வீச்சாளரும், சகலதுறை விளையாட்டு வீரர்
ரஜீவ் – அணித் தலைவர் ஆரம்ப துடுப் பாட்டக்காரர், வலதுகை சுழற்பந்து வீச்சாளர்
காராளசிங்கம் – பாடசாலையின் விளையாட்டு முதல்வர்
ரவிசாந் – உபதலைவர், வலதுகை ஆட்டக்காரர், விக்கெட்காப்பாளர்
மயூரன் – வலதுகை துடுப்பாட்டக்காரர், வலதுகை பந்துவீச்சாளர், சகலதுறை ஆட்டக்காரர்
உமாசுதன் – பொறுப்பாசிரியர்
இரண்டாம் வரிசை வலம் இருந்து இடமாக–
அகிலன் – வலதுகை துடுப்பாட்டக்காரர், வலது கை பந்துவீச்சாளர்.
தனஞ்சயன் – வலதுகை துடுப்பாட்டக்காரர், வலதுகை சுழற்பந்துவீச்சாளர், சகலதுறைஆட்டக்காரர்
எல்மோனிசன் – வலதுகை துடுப்பாட்டகாரர், நடுத்தர வேகப் பந்துவீச்சாளர்
கிருஷ்ணா – வலதுகை துடுப்பாட்டக்காரர்
சிறிவக்சன் – வலதுகை துடுப்பாட்டக்காரர்
பிரகலாதன் – வலதுகை துடுப்பாட்டக்காரர், இடதுகை நடுத்தர வேகப் பந்துவீச்சாளர்
துசியந்தன் – வலதுகை துடுப்பாட்டக்காரர்
ஜீவசங்கர் – வலதுகை துடுப்பாட்டக்காரர்
பின்வரிசை வலமிருந்து இடமாக–
திலீபன் – ஆரம்ப வேகப் பந்துவீச்சாளர், வலதுகை துடுப்பாட்டவீரர்
தர்சன் – வலதுகை ஆரம்ப துடுப்பாட்டக்காரர் புருசோத்தமன் – வலதுகை துடுப்பாட்டக்காரர்
குகநீசன்– ஆரம்ப பந்துவீச்சாளர், வலதுகை துடுப்பாட்டக்காரர்



சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி.

(இடமிருந்து வலமாக)– வ. நந்தீஸ்வரன் – அணிப் பொறுப்பாசிரியர்
சி. மகேந்திரன் – உப அதிபர்
மு.நடராஜா – விளையாட்டு முதல்வர்
கிருஷ்ணசந்திரா – அணித் தலைவர், ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர், துடுப்பாட்ட வீரர்
க. சிவாஜி – அதிபர்
இ. ஜோர்ஜ் – பிரதி அதிபர்
சி. சுஜீவன் – உபதலைவர், வலதுகை சுழற்பந்து வீச்சாளர், ஆரம்ப துடுப்பாட்ட வீரர்.
ஆ.திருமுருகன் – உபஅதிபர்
மு.குமாரரூபன் – பயிற்றுனர்
கே.கபிலன் – வலது கை துடுப்பாட்ட வீரர், அணியின் நம்பிக்கை ஆட்ட வீரர்
இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)
பா.ரஜீவன் – வலதுகை துடுப்பாட்ட வீரர், விக்கெட் காப்பாளர், மிகச்சிறந்த களத்தடுப்பாளர்.
இ.ஜெலன்ஸ்– வலதுகை துடுப்பாட்ட வீரர், களத்தடுப்பாளர்
பி.பாலகிருஷ்ணன் –வலதுகை நடுத்தர வேகப்பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர்.
ஜெ.யசிந்தன் – இடதுகை பந்துவீச்சாளர்
த. ராஜ்குமார் – சிறந்த களத்தடுப்பாளர்
க. நிரோஜன் – வலதுகை துடுப்பாட்ட வீரர், சிறந்த களத்தடுப்பாளர்.
ச.சதீஸ்வரன் – வலதுகை பந்துவீச்சாளர்
த.கௌதீபன் – வலதுகை பந்துவீச்சாளர்
வி.சயந்தன் – வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர், துடுப்பாட்ட வீரர்
பின்வரிசையில் நிற்பவர் (இடமிருந்த வலமாக)
ம.கஜீபன் – சிறந்த களத்தடுப்பாளர்,
ஹே.பிரகாஸ் – சுழற்பந்து வீச்சாளர், களத்தடுப்பாளர்
கு.நிசாகரன் – ஆரம்பத் துடுப்பாட்ட வீரர், சிறந்த சுழற்பந்து வீச்சாளர்
க.நிரோஜன் – வலதுகை துடுப்பாட்ட வீரர், ஆரம்ப வேகப் பந்து வீச்சாளர்.
சி.விஜிதரன் – சிறந்த வலதுகை துடுப்பாட்டவீரர், சிறந்த களத்தடுப்பாளர்.
ஜெ.ஜெயகிருஷ்ணன் – சிறந்த களத்தடுப்பாளர், வலதுகை ஆட்டவீரர், மிதவேகப் பந்துவீச்சளர்.

யாழ். பருத்தித்துறை வீதி

# நவீன தொழில்நுட்பத்துடன் புனர்நிர்மாணம் செய்யப்படும்

## வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் உறுதி

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியை இந்த ஆண்டளவில் புதிய தொழில்நுட்பத்துக் கிணங்க புனர்நிர்மாணம் செய்வதற்கு, வீதி அபிவிருத்திச் சபைத் தலைவர் ஊறுதியளித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் பிரதேசத்து வீதிகளைப் பார்வையிட வருகை தந்த வீதி அபிவிருத்திச் சபைத் தலைவரை - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ்பிரேமச்சந்திரன் - கடந்த 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்தித்து, கலந்துரையாடியபோதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

ஏ- 9 வீதியின் இன்றைய நிலை தொடர்பாகவும், யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய முதல் தர வீதிகள் தொடர்பாகவும் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணத்தின் பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, மானிப்பாய் வீதி, பண்ணை வீதி ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி விளக்கப்பட்டதுடன், வாகனங்களின் பாவனை மூன்று மடங்காக அதிகரித்துள்ள சூழ்நிலையில் - வீதிகள் அகலமாக்கப்பட்டு, இரு வாகனங்கள் சுலபமாகச் செல்லக் கூடியவீதிகளாக (two track Roads) இவை மாற்றப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சுண்ணாம்புக் கற்களுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதால், இந்த வீதிகள் யாவும் கருங்கற்களால் புனரமைக்கப்பட வேண்டிய தேவையும் வலியுறுத்தப்பட்டது.

புனருத்தாரணம் செய்யப்படும் வீதிகள் - குறைந்தபட்சம் 10 வருடங்களுக்குத் தாக்கு பிடிக்கக்கூடிய (carpet) வீதிகளாக உருவாக்கப்படுவதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

சுரேஷ்பிரேமச்சந்திரனின் கருத்துக்களைப் பூரணமாக ஏற்றுக்கொண்ட வீதி அபிவிருத்திச் சபைத் தலைவர் - எதிர்வரும்காலங்களில் சகல விடயங்களையும் கவனத்திலெடுத்து, வீதிகள் அமைக்கப்படும் என உறுதியளித்ததுடன் -

யாழ். பருத்தித்துறை வீதியும், இன்னொரு வீதியும்இந்த வருடம் புதிய தொழில் நுட்பத்துக்கிணங்க புனர் நிர்மாணம் செய்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

ஆனால் இந்த வீதிகள் அகலமாக்கப்படும்போது பொதுமக்கள் - மழைநீர் வழிந்தோடுவதற்கு ஏதுவாகத் தேவையான இடங்களில் தமது வேலிகளை நகர்த்தி உதவி செய்தால், காலதாமதம் இல்லாமல் தமதுபணிகளைச் செய்ய முடியும் என வீதி அபிவிருத்திச்சபைத் தலைவர் தெரிவித்தார்.

எனவே, அதிகரித்துவரும் வாகன நெருக்கடி, இதனால் ஏற்படும் வீதி விபத்துக்கள் இவற்றைக் கருத்திற்கொண்டு, பொது மக்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும், பிரேமச்சந்திரன் பொது மக்களைக் கோரியுள்ளார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு லயன்ஸ் கழகத்தின் மருத்துவ முகாம்

(வடமராட்சி)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவமுகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் தலைவர் மு.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் -பற்சிகிச்சையும், பொதுச் சிகிச்சைகளும் அளிக்கப்பட்டதுடன், கண் பரிசோதனை செய்யப்பட்டு, 307 பேருக்கு மூக்கு கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவ சிகிச்சையை பருத்தித்துறை மாவட்ட அதிகாரி சி.கதிரவேற்பிள்ளையும், பற்சிகிச்சையை பல் வைத்திய நிபுணர் ஜெயராசாயும், கண்பரிசோதனையை எஸ்.எம். பெர்ணாண்டோ நிறுவனத்தினரும் வழங்கினர்.

இந்த நிகழ்வில் சுனாமி கடல் அனர்த்தத்தின்போது பெற்றோர்களை இழந்த ஐந்து மாணவருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டதுடன், பத்து மாணவர்களுக்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் வழங்கப்பட்டது. (14)

# 2003 இல் விண்ணப்பித்தோர் பலருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலானோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்து இரண்டு வருடங்களைக் கடந்துள்ள நிலையிலும், இதுவரை வழங்கப்படவில்லை.

தற்போது யாழ்.குடாநாட்டில் போக்குவரத்துப் பொலிஸார் கடுமையாகச் சட்டங்களைக் கடைப்பிடிக்கின்றமையால், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது வாகனங்களைச் செலுத்த முடியாதுள்ளது.

இது தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தினாலும், அதனையும் மீறி சாரதிகளிடம் குற்றப்பணம் அறவிடப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக கொழும்பு மோட்டார் போக்குவரத்துதிணைக்களத்துடன்தொடர்புகொண்டு கேட்டபோது, 2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் விண்ணப்பித்தவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், 2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் விண்ணபித்தவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெரும்பாலானவர்களுக்கு வந்து சேரவில்லை எனக் கூறி - பலர் யாழ். செயலகத்துக்கு வந்து அலைந்து திரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அதிபரின் தாக்குதலுக்குள்ளான மாணவன் வைத்தியசாலையில்

மாணவர்களுக்குள் ஏற்பட்ட சிறு பிணக்கைத் தீர்க்கச் சென்ற வடமராட்சிப் பிரதேச பாடசாலையொன்றின் அதிபர் மாணவன் ஒருவரைத் தாக்கியதால் அந்த மாணவன் மயக்க முற்று வீழ்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தரம் - 8 இல் கல்வி பயிலும் சிவலிங்கம் விதுசன் ( வயது13) என்ற மாணவனையே மீது அதிபர் கையால் தாக்கியதாகவும் இதனால் மயக்க முற்று, மூச்சுத் திணறல் ஏற்பட்டு மாணவன் வீழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

பின்னர் பாடசாலை ஆசிரியர்கள் இருவரால் மந்திகை மருத்துவமனையில் இந்த மாணவன் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த இந்த மாணவனுக்கு மூச்சுத் திணறல் நோய் இருப்பதாகவும், கடந்த வாரமும் இந்த மாணவன் மூச்சுத் திணறலுக்குள்ளாகி 15 நாட்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (14)

# உலர் உணவு நிவாரணத்தை தொடர்ந்து வழங்குமாறு நாவற்குழி மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் போது தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து 2002 ஆம் ஆண்டில் மீளவும் குடியமர்ந்த நாவற்குழி மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் வரை, மேலும் ஒரு வருடத்துக்காவது உலர் உணவு நிவாரணத்தை தொடர்ந்தும் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கோரி, அந்தப் பகுதி மக்களால் ஒப்பமிடப்பட்ட கடிதமொன்று - நாவற்குழி கிழக்கு விவசாயிகள் சம்மேளனத்தால் அரச அதிபருக்கு அனுப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் நாவற்குழி மக்களாகிய நாங்கள் 2002 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்ததிலிருந்து யுத்தத்தால் அழிவடைந்த எமது வதிவிடங்கள் முழுமையாகத் திருத்தப்படாத நிலையிலும் கடற்தொழில் தடை, எமது வயல் நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமை என்பன காரணமாக எமது தொழில்களை முழுமையாகச் செய்ய முடியாமை மற்றும் அடிப்படை வசதிகள் பூர்த்திசெய்யப்படாத நிலையில், எமது வாழ்க்கைத் தரத்தைத் தொடர்ந்து கட்டியெழுப்ப முடியாத நிலையில் வாழ்ந்து வருகிறோம்.

இந்த நிலையில் இன்றுவரை 25 ஆயிரம் ரூபா மீளக்குடியமர்வுகொடுப்பனவே வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை - எமது வதிவிடங்களைத் துப்புரவு செய்யவும், சிறு திருத்தங்கள் செய்யவுமே போதுமானதாக இருந்தது. மிகுதிக் கொடுப்பனவாகிய 75 ஆயிரம் ரூபா கூட இதுவரை எமக்கு வழங்கப்படவில்லை.

அதேவேளை, வலிகாமப் பகுதி மக்கள் மீளக் குடியமர்ந்து கடந்த 9 வருடங்களுக்குமேலாக உலர் உணவு நிவாரணத்தைப் பெற்று வருகிறார்கள்.

ஆனால் நாம் 2002 ஆம் ஆண்டே எமது பகுதியில் மீளக் குடியமர்ந்ததும் குறுகிய காலத்தில் எமது உலர் உணவு நிவாரணத்தை நிறுத்துவது எமக்கு மிகுந்த மன வேதனையை ஏற்படுத்துகிறது.

எனவே தயவுசெய்து எமது வாழ்க்கைத்தரம் உயரும் வரை மேலும் ஒரு வருடமாவது உலர் உணவு நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு தயவாக வேண்டுகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.





நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டம் என்ற நூல் வெளியீட்டு விழாவில் - ஆசிரிய கலாசாலை முன்னாள் உடற்கல்வி விரிவுரையாளர் ஜதுகுலசிங்கம் உரையாற்றுவதையும், வி.நடராஜா, கப்டன் டீ.எம்.குணசிங்கம், மத்திய கல்லூரி அதிபர் இராசதுரை, நூலாசிரியர் தம்பிராஜா, வடகிழக்கு மாகாண விளையாட்டுத்துறை முன்னாள் பணிப்பாளர் மரியதாஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் - யாழ். மாவட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்டன் டி.எம்.குணசிங்கத்திடமிருந்து தொழிலதிபர் ஜீவா முதற்பிரதியைப் பெறுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## காரைநகர் கடற்தொழிலாளருக்கு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன

காரைநகர் பகுதியில் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு முதற்கட்டமாக கடற்தொழில் உபகரணங்கள், சமாசத்தினூடாக இன்று காலை 10 மணிக்கு சாம்பலோடை மீனவர் தங்குமிடத்தில் வைத்து பட்டினிக்கு எதிரான நிறுவனத்தால் வழங்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கு கட்டுமரங்களும், 20 பயனாளிகளுக்கு ஒரு தொகுதி வலைகளும், அதனோடிணைந்த உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. (21)

## திருத்த மதிப்பீடு தயார்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வெளியிணைப்பு இயந்திரங்களைத் திருத்துவதற்கு சுமார் 7 மில்லியன் ரூபா வரையில் செலவு ஏற்படுமென மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை கெயர் நிறுவனம் பொறுப்பெடுத்து, கடற்தொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை காரைநகர் தொடக்கம் சுண்டிக்குளம் வரை நடைமுறைப்படுத்தவிருப்பதாக, கடற்தொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (21)

## சிகை ஒப்பனையாளர் சங்கப் பொதுக்கூட்டம்

தீவக சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் - நாளை மறுதினம் காலை 10 மணிக்கு சங்கத் தலைவர் பொ.கிருபதாஸ் தலைமையில் வேலணை சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதில் கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகள், ஒன்றியப்பிரமுகர்கள், வேலணை, ஊர்காவற்துறை அரசியற் துறையினரும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்தக் கூட்டத்துக்கு தீவகம் சார்ந்த அனைத்துப் பிரதேச உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் அன்ரன் ராசநாயகம் அறிவித்துள்ளார்.

## சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் சிறிய வெடிபொருள் ஒன்று வெடித்து, சிறுவன் ஒருவன் காயமுற்றதாகப் படைவட்டாரங்கள் தெரிவித்தன.

குருநகரைச் சேர்ந்த 12 வயதான மதியழகன் என்ற சிறுவனே காயமடைந்தவராவர். கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4.40 மணியளவில் கிரனேட் ஒன்றைக் கண்டெடுத்து, அதைப் பகுதியாகப் பிரிக்க முற்பட்டபோதே இந்த வெடிவிபத்து ஏற்பட்டதாகப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

## நலன்புரி நிலையங்களில் வைத்தியசேவைகள்

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வத்திராயன் நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் மக்களுக்கான வைத்திய சேவைகளை, செஞ்சிலுவைச்சங்க நடமாடும் வைத்திய சேவைப்பிரிவு செவ்வாய், வியாழன், சனி ஆகிய மூன்று தினங்களிலும் நடத்தி வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நடமாடும் வைத்திய சேவையின்போது அனைத்துக்குடும்பங்களுக்கும் சவர்க்காரங்கள் வழங்கப்பட்டன. (21)

## ஏப்ரலில் பெறுபேறுகள்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த மாதம் வெளியிடப்படும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்தபரீட்சைத் திணைக்கள ஆணையாளர் மகிந்த விஜயசிறி - சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மாத்தறை, அம்பாந்தோட்டை கிழக்கு மாகாணம் போன்ற பகுதிகளிலும் இந்தப் பெறுபேறுகள் உரிய காலத்தில் வெளியிடப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.




# சோம்பேறி

உன்னுடைய பிரச்சினையை நீ தான் தீர்க்கவேண்டும். அதை வேறு எவராலும் தீர்க்க இயலாது. சோம்பேறியாகிய நீ, உன்னிடம் எவ்வளவு பணம் இருந்தபோதிலும் உண்மையான மனிதனாக இருக்க மாட்டாய். நீ அனுபவிக்கும்



சுகங்கள் உன்னை அறியாமல் உன்னையே நாசப்படுத்திக் கொண்டிருக்கும். இறைவன் சோம்பேறிகளுக்கு விதித்திருக்கும் தண்டனையோ சாதாரணமானதல்ல. இயற்கை விதிக்குக் கீழ்ப்படிந்தாலொழிய வேறு எந்த சக்தியாலும் முடியாது. சோம்பேறியாய் வாழ்க்கை நடத்தி, முழு மனிதத் தன்மையை அடைந்து விடலாம் என்று நீ எண்ணுவதானது - இயற்கை விதியை எதிர்த்துப் போராடுவதற்கொப்பாகும். அந்தப் போராட்டத்தில் நீ ஒரு போதும் வெற்றியடையமுடியாது.

உடல் உறுதி பெற்ற சோம்பேறிப் பிச்சைக்காரர்களுக்கு, மரணதண்டனை விதிக்கும் சட்டமானது, ஒருகாலத்தில் இங்கிலாந்தில் நடைமுறையில் இருந்தது. முதலாவது தடவை கண்டுபிடிக்கப்படின்; சவுக்கடிதான் தண்டனை. இரண்டாவது தடவை கண்டு பிடிக்கப்படின்; அவனுடைய காதுகள் அறுக்கப்படும். மூன்றாவது தடவை கண்டு பிடிக்கப்படின்; அவனுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும். நான்காவது தடவை கண்டுபிடிக்கப்படின்; நாட்டின் விரோதி எனக் கருதப்பட்டு, மரணதண்டனையைத் தவிர வேறு தண்டனை அவனுக்குக் கொடுப்பது கிடையாது.

ஒரு சோம்பேறி கூறினான் - நான் என் குடும்பத்துக்காக உணவைத் தேட முடியவில்லை என்று. என்னாலும் தான் முடியவில்லை. எனினும் அதனை உழைத்துப் பெற முடிகிறது என்று பக்கத்திலிருந்தவன் பளிச்சென்று பதில் சொன்னான். உலகில் பிறந்து வாழும் ஒவ்வொருவனும், தான் தன் உணவைத் தேடித்தான் தீரவேண்டும். அவ்வாறானால்தான் உலகம் ஒழுங்காக இருக்கும். மக்களால் என்ன, தாய், தந்தையர்களால் சோம்பேறிகள் முதலில் புறக்கணிக்கப்படவேண்டும். 'ஊனுக்கு நானும், உழைப்புக்கு என் அப்பனும்' என்ற அவர்களின் தத்துவம் சின்னாபின்னமாக்கப்படவேண்டும். சம்பாதிக்காதவன் சாப்பிட உரிமை அற்றவன் என்ற தத்துவம் நிலைநாட்டப்பட்டு, அவர்களை வீட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட வேண்டும்.

சோம்பேறித்தனமானது, ஆரம்பத்தில் சிலந்திவலை போன்று மெல்லியதாக இருந்து உன்னைச் சூழும். ஆனால் அது இறுதியில் இரும்பு விலங்குகளாய் ஆகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. அதுவே உனக்கு வறுமை வருவித்து இழிதொழில்களைச் செய்யுமாறு உன்னை வலியுறுத்தும். சோம்பேறியாக வாழ்க்கை நடத்தி, திருட்டுத் தொழிலில் ஈடுபட்டு, பிரெஞ்சு சிறையை அடைந்த ஒரு கைதியின் வலது புஜத்தில் என்ன வார்த்தைகள் பச்சை குத்தப்பட்டிருந்தன என்பதை அறிவாயா? சென்ற காலம் என்னை ஏமாற்றியது. நிகழ்காலம் என்னைப் பயமுறுத்துகிறது.

நீ உன்னுடைய அறிவைக் கவனிக்காது விட்டுவிடின், மந்தனாய் போய்விடுவாய். உன்னுடைய நிலத்தைக் கவனிக்காது விட்டுவிடின், நீ தரித்திரனாகி விடுவாய். உன்னுடைய அயலவர்களைக் கவனிக்காதிருப்பின், சுயநலமாகி விடுவாய். உன்னுடைய ஆன்மாவைக் கவனிக்காதிருப்பின் நீ பிசாசாகப் போய்விடுவாய்.

மனித இதயமானது - திருகைக்குச் சமமானதாகும். திருகையின் அரைபடச் சாமான் இல்லையாயின் - திருகை தன்னையே அரைத்துக்கொள்வது போன்று மனிதனுக்கு வேலை இல்லையாயின் அவன் தன்னையே அழித்துக் கொள்வான். உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் சவக்கிடங்கு சோம்பேறித்தனம்தான்.

இளைஞனே! நீயோ வாழப் பிறந்தவன். வாழப் பிறந்தவன் - வாழ வேண்டாமா? உன்னைச் சூழ உள்ளவர்கள் போன்று நீயும் உன்னுடைய வேலையால் நிருபி. உன்னுடைய தவறுக்கான தண்டனையை நீ தான் அனுபவிக்க வேண்டும். அந்தத் தண்டனை என்னவென்றால், நீ உலகில் ஒரு மனிதனாகக் கருதப்படமாட்டாய். நடைப்பிணமாய் கருதப்படுவாய் அவ்வளவுதான்.

# மனமே! மீண்டெழுவாய்



போர் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணங்களால் பல்வேறு வகையில் உளநலம் பாதிப்புக்குட்பட்டவர்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களின் மனதை ஆற்றுப்படுத்தும் முகமான கருத்துக்களை உள்ளடக்கி இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரிக்கப்படுகிறது.

மனமே! கொடிய அலை உயர்ந்து வேகமாக வந்த காட்சி உன் மனதைவிட்டு அகலவில்லையா. நீ ஓட ஓட அலை உன்னை விட்டுத் துரத்திய காட்சியும், பயமும் உன் நெஞ்சை உலுக்குகிறதா? இராணுவம் துரத்தித் துரத்தி உன்னருகில் வந்த போதும், ஷெல் பாய்ந்து பாய்ந்து துரத்திவந்து உன்னருகில் விழுந்தபோதும் இத்தகைய அனுபவம் உன் நெஞ்சை எப்படி திக்கற்றுத் தவிக்கவைத்திருக்கும்.

மனமே! மனிதக் கொடுமைகள் தாண்டவமாடிய செயல் எல்லோர் மனங்களிலும் பாதிப்பின் வடிவம் தெரியாதிருக்கும். அதை உணர்த்தத்தான் இயற்கை தன் நடவடிக்கையை அலைவடிவில் காண்பித்ததோ.

மனமே! உலக மனித நியதிகள் மனித வடிவங்களில் கொடூரமாகிக்கொண்டிருப்பதை ஒரு கணம் சிந்தி. கொலையும், பயமுறுத்தல்களும், கொள்ளைகளும், பட்டம், பதவிப்போட்டிகளும் பகுந்துணர்ந்து மனித மனங்கள் பூஜிக்கப்படாதது உன்னைத் தொடரும் மனித அடாவடித்தனங்களுக்கு மத்தியில் உன்னைப் பயமுறுத்திய அலையின் சீற்றமும், உன்னைத் துரத்திய அலையின் செயலும் ஒரு கணப்பொழுதில்தான் நிகழ்ந்தது.

அந்த இயற்கைக்குத் தொடர்ந்தும் உன்னை அச்சத்துக்குட்படுத்த விருப்பின்றிச் சென்றதை நீ ஒரு கணம் சிந்தித்து ஆறுதலடை. இயற்கையின் அனர்த்தம் மனித வாழ்வியலின் தத்துவத்தை உணர்த்திச் சென்றிருப்பதைச் சிந்தி. பொருள், பொருள் என்று பொருளுக்குமேல் பொருள் சேர்த்து, உல்லாசமாக வாழநினைத்த வாழ்க்கை நிலைக்குமா? பட்டம், பதவியென்று முறைகேடாக மற்றவனைத் தாழ்த்தி மிதக்கும் வாழ்க்கை நிலைக்குமா? தனக்குத் தனக்கு என்று கூறிக் காக்கும் உரிமைகள் நிலைக்குமா? இனத்தை ஒடுக்கி வஞ்சித்து, நீதியற்று ஆட்சிபுரிபவன் மனித இனமற்று ஆளமுடியுமா?

இயற்கையைச் சடமென்று (பூமித்தாயைக்) குண்டு போட்டும், அணுகுண்டு பரிசோதித்தும் காண விளையும் முரட்டுமனிதர் காண விளையும் நோக்கங்கள் நிறைவேறுமா? சாதி, சமயம், உயர்வு, தாழ்வு என மனிதனே மனிதனைப் பிரித்து, வகுத்து நிலைத்து வாழ நினைத்த வாழ்க்கை நிலைக்குமா?

உயிர் எப்படி வந்தது? உயிர் எப்படிப் போகும்? எங்கே போகும்? எப்போது போகும்? என்பது மனிதனுக்குத் தெரியுமா? மரணம் என்ற ஒன்று நிச்சயமானது என்று தெரிந்த மனிதன், அது நூறு வயதுக்குட்பட்ட வாழ்க்கை என்று தெரிந்த மனிதன் நோய்க்குட்படும் நிலைக்குட்படும் உடலைக் கொண்ட மனிதன் போட்டி, பொறாமை, தட்டிப் பறித்தல், வஞ்சித்தல், கெடுத்தல், மேலாதிக்கம் செலுத்துதல் போன்ற மனநெருக்கீட்டுக்குட்படும் செயல்களால் மனிதனை மனிதன் நெருக்கும் போது, கடலலையின் சீற்றத்தைக் கண்டு பயம் கொள்ளலாமா? அச்சமடையலாமா?

மனமே! பொறிவழி கண்ட காட்சிகளும், கேட்ட வார்த்தைகளும் உன் மனத்தை அல்லற்படுத்தும், அது மனத்துக்குரிய இயல்பு. ஆனால் அந்த அச்சத்தையோ, பயத்தையோ உன் மனதில் நிரந்தரமாக நிலைநிறுத்தாதே. கழிவன கழிந்து, புதியவை புகுந்திட உன் மனதை மாற்றிக்கொள். இல்லையேல், உன் மனதில் ஏற்பட்ட அச்சமும், பயமும் உன்னை இந்த உலகுக்கு ஒவ்வாததாக்கிவிடும். அந்த நிலை உனக்கு வேண்டவே வேண்டாம்.

மனமே! இயற்கையின் சீற்றம் தந்த காட்சிகள் உனக்குள் பல தத்துவ விளக்கத்தை ஏற்படுத்தியிருப்பதைக் கண்டு, உன் மனதைத் தேற்றிக் கொள். "அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை தான் உனது வாழ்க்கையடா" என்பதற்கிணங்க, உன் வாழ்க்கையை மகிழ்வுடன் வாழ்ந்து முடிக்க மனமே! மீண்டெழுவாய்.

மலர் சின்னையா

# விவாகரத்தில் முடியும் திருமணங்கள்

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். அது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டு, ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவனால் வழங்கப்பட்ட வரமாகக் கருதப்படுகிறது.

எண்ணம்போல வாழ்வு அமையாவிட்டால்... வாழ்வுபோல எண்ணங்களை மாற்றியமைத்துக்கொள்ள முடியாத பலவீனமான மனிதர்களே விவாகரத்துவரை போகிறார்கள். விவாகரத்து என்பது, பலரை சின்னத்தனப்படுத்தி சிரிக்க வைத்தாலும், ஒரு சிலரை சிந்திக்க வைக்கும் கசப்பான சம்பவமுமாகும்.

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணம்—உடைந்து போவதென்றால், இங்கே வானமும், பூமியும் அதிர்ந்து போகின்றன. உயிரற்ற வானத்துக்கும், பூமிக்கும் கலக்கம் ஏற்படும்போது, பல வருடங்கள்ாக ஒன்றாக வாழ்ந்து பிரியும் உங்களுக்கு அந்த நிலை இல்லையே என்பது தான் வேதனைக்குரிய விடயம்.

இறைவன் திருமறையில் கூறு கிறார்— விவாகரத்து என்பது என்னுடைய கசப்பான விருப்பம் என்றும், இளந்தம்பதிகள் உணரத் தவறுவதுதான் அறிவீனம்.

'இன்னார்க்கு இன்னாரென்று
எழுதி வைத்தானே தேவன் அன்று'

அன்று கவிஞன் கூறிய உண்மையான கருத்தை மாற்றியமைக்க முற்படுவோருக்கு வாழ்வு பூராகவும் சோதனைகளேயன்றி வேறில்லை.


வாழ்க்கை உங்களுடையதாக இருக்கலாம், வாழ்வதும் விவாகரத்துப் பெறுவதும் உங்களுடைய உரிமைகளாக இருக்கலாம். ஆனால் ஒரு குழந்தை பிறந்த பிறகு விவாகரத்துப் பெறுதல் என்பது, குழந்தையின் வாழ்வுக்குக் கேள்விக்குறியாக அமைவதோடு, அதுவே முற்றுப்புள்ளியாகவும் மாறுகிறது. இதை விவாகரத்துப் பெறும் பெற்றோர்கள் உணரத் தவறுவதுதான் வேதனைக்குரிய விடயம்.

'இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சையல்லவா?' ஆதலால்தான் இருக்கும் வாழ்வு கசக்கும்போது, புதியதொரு மறுவாழ்வுக்காக உள்ளம் கொள்ளை போவது சகஜம். ஐந்தறிவுள்ள மிருகம் போல ஆறறிவுள்ள மனிதன் மாறுகின் றான். அல்லது சூழவுள்ளவர்களின் தூண்டுதலால் மாற்றப்படுகின்றான். ஆண்களுக்கு மறுவாழ்வு என்பது புத்தம் புதிதாக அமைவது போல பெண்களுக்கு அமையுமா? ஆங்காங்கே சில விதி விலக்குகள். கைக் குழந்தையோடு வாழாவெட்டியாகி, கண் கலங்கி நிற்பதுதான் பரிதாபம்.

'வாழ்க்கையென்றால் ஆயிரம் இருக்
கும்
வாசல்தோறும் வேதனையிருக்கும்'.

பொறுப்பதில்தான் வாழ்க்கையில் இன்பம் உண்டு. சகிப்பதில்தான் இறைவனின் அருள் இருக்கும். இரண்டுமே இல்லாத விடத்தில் இறைவனின் கோபப் பார்வை தான் விளையும்.

இன்று எமது நாட்டில் கூட அபிவிருத்தியடைந்த நாடுகளின் கலாசாரம் புகுந்து விட்டது.



சாதாரணமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியதும், திருத்திக் கொள்ளக்கூடியதுமான சிறு சிறு பிரச்சினைகள் இன்று பெரும்பாலும் விவாகரத்தில் தான் போய் முடிகிறது. இதனால் ஒரு பாவமும் அறியாத சின்னஞ் சிறு மழலைகளே பாரிய தண்டனைகளை அனுபவிக்கத் தொடங்கிவிடுகின்றனர். ஒரு பாவமும் அறியாத குழந்தையைத்தான் இங்கும் அங்கும் பேரம் பேசித் தாயிடமிருந்தும், தந்தையிடமிருந்தும் கதறக் கதறப் பிரிக்கப்படுகிறது. இரண்டு இரத்த பாசங்களால் உருவாக்கப்பட்ட அந்த சொர்க்கத்து ஜீவன்— தாய், தந்தை என்ற புனித உறவுகளிடமிருந்து விடை பெற்றுச் செல்லும் காட்சியைக் காண்பவர் உள்ளங்களையும் கலங்க வைக்கிறது.

எந்தவொரு பிள்ளைக்கும் – தாயும், தந்தையும் நல்லபடியாக இருந்தால்தான் வாழ்க்கை பூரணத்துவம் பெற்றதாக அமையும். பிரிந்துபோன அந்தக் குழந்தை சித்தியுடனோ, சித்தப்பாவுடனோ, பாட்டியுடனோ வளர்வதென்றால், அதற்கு சின்ன வயதிலே தாய் தந்தையின் பூரண அன்பு இல்லாமல் மனவிரக்திக்கு ஆளாகும்போது, சேர்ந்தே கொடுமைகளுக்கும் ஆளாக்கப்படுகிறது.

குழந்தையின் பழி, பெற்றவர்களைச் சோதிக்காமல் விடுமா? எங்கே போய் வாழ்ந்தாலும், நியாயமில்லாமல் விவாகரத்துப் பெற்றவரின் வாழ்க்கை பூரணத் துவம் அடையாது ஜீவிப்பதைக் காணலாம். இன்று புள்ளி விபரங்களின் அடிப்படையில் பெரும்பாலான விபத்துகளுக்கு ஆளாகி வருபவர்கள்— விவாகரத்துப் பெற்ற தாய், தந்தையர்களின் குழந்தைகளே. பாட சாலைகளில் அதிகம் பின்தங்கிய நிலையில் இருக்கும் பிள்ளைகள்கூட தாயும், தந்தையும் இல்லாத பிள்ளைகளே. இன்று மனநோயால் பாதிக்கப்படுகின்ற பிள்ளைகள் யார் என்று பார்த்தால் தாய், தந்தை இல்லாமல் வளர்ந்த பிள்ளைகளே.

பெற்றோர்கள் சற்று சீர்தூக்கிப் பார்த்து, சிந்தித்துப் பாருங்கள். பெற்றோர்கள் உயிரோடு இருக்கும்போதே உங்கள் பிள்ளைகளின் தவிப்பு எத்தகையதென்பதை.

எனவே இத்தகைய கசப்பான விவாகரத்தை, அதன் விபரீதங்களை உணர்ந்து வாழுங்கள். இதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

# பிஞ்சு முகத்தின் தேடல்

நான் ஒழுங்கையில் நின்று தம்பியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் சின்னச் சைக்கிளில் ஏறி ஓடிக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் அட்டகாசமான சிரிப்பு! தன் கெட்டித்தனத்தைத் தானே பாராட்டிக் கொள்ளும் பாவனை! அவனுக்கு எதுவித கவலையும் இல்லை! நேரத்துக்கு உணவு கிடைக்கும். வேண்டியவரை விளையாடலாம். எவ்வளவு நேரமும் நித்திரை கொள்ளலாம். எனக்கு அப்படி ஒரு வாய்ப்பில்லை! அவன் அதிஷ்டக்காரன்!



மனோன்மணி சண்முகதாஸ்

'எடி! கோகிலா! தம்பியைக் கவனமாப் பாரடி!' உள்ளே அம்மம்மாவின் கட்டைக் குரல் கேட்டது. எனக்கு எரிச்சலாக இருந்தது. இந்த அம்மம்மாதான், எங்கள் வீட்டில் பெரிய அதிபர் மாதிரி. அப்பா, அம்மா, அண்ணா எல்லோருமே அவளுக்குப் பயம்.. எனக்கும் பயம்! ஆனால் வெளியே காட்டிக் கொள்ள மாட்டேன். என்னுடைய அம்மாவும், அப்பாவும் வேலை செய்கிறார்கள். காலையிலே வீட்டை விட்டுப் புறப்பட்டால், மாலை 6 மணிக்குத் தான் வீட்டுக்கு வருவார்கள். வீட்டுக்கு வந்தாலும் அவர்களுக்கு எங்களைக் கவனிக்க நேரமில்லை. ஏதோ பெரிய புத்தகங்களை வைத்துப் புரட்டிக் கொண்டிருப்பார்கள். எனவே அம்மம்மா தான் வீட்டு நிர்வாகம் முழுவதும்!...

தம்பியின் சைக்கிள் மணிச்சத்தம் கேட்டதும்! ... ஐயோ ஒழுங்கை முகப்புக்குப் போட்டான். நான் எழும்பி ஓடினேன்.. அதற் கிடையில் அவன்றோட்டுக்குப் போய் விட் டான். நான் வேகமாக ஓடினேன். என்னை எங்கள் வீட்டு நாய் வீமனும் துரத்தியது. அப் பாடா! தம்பியின் சைக்கிள் நின்றுவிட்டது. ஆனால்... அதற்கிடையில் வேகமாக வந்து மோட்டார் சைக்கிள் தம்பியின் சைக்கிளை மோத... அவன் தூக்கி வீசப்பட்டான் . நான் திகைத்து நிற்க, தம்பி என் காலடியில் வந்து விழுந்தான். நல்ல காலம் அவனுக்கு அடிபடவில்லை. ஆனால் மோதிய அண்ணையின்ரை மோட்டார் சைக்கிள் றோட்டுப் போடக் குவிச்சிருந்த கல்லுக்குவியலோடை போய் மோதியது. அண்ணை தலை அடிபட விழுந் தார். தலையிலை கெல்மெற்றும் இல்லை... நான் தம்பியைத் தூக்கினேன்! அவன் பயத்தில் என்னைக் கட்டிப் பிடித்தான்.

சத்தம் கேட்டு வந்த சனமும், றோட்டாலை போன சனங்களும் சேர்ந்து அண்ணையைத் தூக்கிச்சினம். அவற்றை பொக்கெற்றிலை இருந்து விழுந்த கைத் தொலைபேசி வெளியே விழுந்து கிடந்தது. அதை யாரும் கவனிக்கவில்லை. நான் அதிலேயே கண்ணை வைச்சுக் கொண்டிருந்தன். அண்ணைக்குத் தலையிலை நல்ல அடி! மயங்கிப் போனார். தம்பியின் சைக்கிள் எந்த விதமான அடியும் படாமல் ஒழுங்கைக்கை நின்றது. சனமெல்லாம் கனக்கக் கதைச்சுது. எனக்கு என்ன நடந்தது எண்டு தெரியும்! 'பொடியன் குடிச்சுப் போட்டு வந்திருக்குது'! ஒரு பெரியவர்சென்னபோதும், எல்லாச் சனமும் ஒத்து ஊதிச்சுது. ஓட்டோவில் அண்ணையை ஏத்திக் கொண்டு ஒரு மாமா ஆஸ்பத்திரிக்குப் போனார்! நான் தம்பியைப் பார்த்தேன் அவன் தன்ர சைக்கிளிலை ஏறி ஒழுங்கையாலை வீட்டை போய்க் கொண்டிருந்தான்!.

நான் வீட்டை போக நினைச்சு காலடி எடுத்து வைக்க, வேலியோரம் கிடந்த கைத் தொலைபேசி கிணுகிணுத்தது. பளிச் செண்டு வெளிச்சமும் தெரிஞ்சது. எனக்கு நீண்ட நாளாக ஒரு ஆசை! அம்மாவும், அப்பாவும் கைத் தொலைபேசி வைச்சிருக்கினம். ஆனால் நான் அதைத் தொடக் கூட விடமாட்டார்கள். பள்ளிக்கூடத்திலை ரீச்சர் மார் கனபேர் வைச்சுக் கொண்டு கதைப்பினம். இப்ப என்ரை ஆசை நிறைவேற ஒரு சந்தர்ப்பம் கிடைக்குது. நான் தம்பியைப் பார்த்தன். அவன் தூரத்தில் அம்மம்மாவோடை நின்றான். நான் சுற்றும் முற்றும் பார்த்தன். ஒருத்தற்ற தலைக் கறுப்பும் தெரியேல்ல. மெல்லத் தொலைபேசியை எடுத்துப் பொக்கெற்றுக்குள்ள வைச்சிட்டன்...! என்ரை மனம் இது களவில்லை எண்டு சொல்லிச்சுது. நானும் அதை ஒத்துக் கொண்டன்.

அண்டைக்கு இரவு எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டு இருந்தம். அப்பாவின்ரை பொக்கெற்றுக்கை கிடந்த கூப்பிடுவான் சத்தம் போட்டது. இது அம்மம்மா கைத்தொலைபேசிக்கு வைச்ச பெயர். அப்பா எடுத்துப் பேசினார். நான் அதை உன்னிப்பாகப் பார்த்தன். 'நாளைக்குவந்து பாக்கிறன்! பொடியன் கொஞ்சம் குடிச்சிட்டான் எண்டு அறிஞ்சன்' அப்பா பேசியது எனக்கு... பின்னேரம் நடந்ததை நினைவுபடுத்தியது. நான் அதைப் பற்றி ஒருவருக்கும் சொல்ல விரும்பல்ல. அப்பாவிடம் கேட்டன் அப்பா உந்தப் போனிலை எப்பிடிக் கதைக்கிறதெண்டு சொல்லித் தாறிங்களோ! நான் கேட்ட விதம் அப்பாவுக்கு கொஞ்சம் சந்தேகம்! என்னைப் பார்த்த பார்வையில் அது தெரிஞ்சது. அதுக்கிடையிலை அம்மா சொன்னாள்!. அவளும் இனி கதைக்கப் பழக வேணும் தானே! அப்பா என்னைக் கூப்பிட்டு பக்கத்தில் இருத்தி கைத் தொலைபேசியிலை எதை எப்படி அமுக்கி கதைக்கவேண்டுமெண்டு விளங்கப்படுத்தினார். நான் பொக்கெற்றிலை கிடந்த தொலைபேசியை கையால் பற்றிய படி அப்பா சொன்ன விளக்கத்தை மனதில் பதித்துக் கொண்டேன்.

அந்த நேரம் அம்மம்மா தோளிலை தம்பியைச் சாய்ச்சுக் கொண்டு வந்து சொன்னாள். 'பிள்ளைக்கு நெருப்புப் போல காய்ச்சல் காயுது! ஏதும் மருந்து குடுத்தால் நல்லது' அம்மா ஓடிப் போய் தம்பியைப் பார்த்தாள். தொட்டுப் பார்த்தாள். 'ஐயோ! நெருப்புப் போலை சுடுகுது ! உடனை டொக்கரிட்டை காட்ட வேணும்'! அப்பா சேட்டை எடுத்து மாட்டிக் கொண்டு கைத்தொலைபேசியிலை ஓட்டோக்காரனுக்குச் செய்தி சொன்னார். 5 நிமிடத்திலை அவன் வந்திட்டான். தம்பியை அப்பாவும், அம்மாவும் டொக்டரிடம் காட்டக் கொண்டு போனார்கள். அம்மம்மா அடுக்களையில் வேலை செய்து கொண்டிருந்தாள். நான் நாளைக்குப் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டுபோற புத்தகங்களைச் சரி பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென என்ரை பொக்கெற்றிலை இருந்த தொலைபேசி கிணுகிணுத்தது. நான் துள்ளியெழும்பினேன்!.

அம்மம்மா அடுக்களையிலை இருந்து கத்தினாள் 'எடி கோகிலா கூப்பிடுவான் கூப்பிடுது என்னெண்டு கேளடி'! எனக்குக் கொஞ்சம் பயமாயிருந்தது. சமாளிச்சுக் கொண்டு பொக்கெற்றுக்குள்ளாலை அதை எடுத்து ... கையிலை வைச்சு அப்பா விளங்கப்படுத்தின படி பொத்தானை அமுக்கி ... காதிலை வைச்சு ஹலோ ! எண்டு மெதுவாகக் கேட்டன். போனுக்குள்ளாலை ஹலோ! எண்டு குரல் கேட்டது. நானும் ஹலோ எண்டு சொன்னன்! அந்தக் குரல்!... செல்லமாகச் சிணுங்கியது... என்ன ...! 5 மணிக்கு வாறதெண்டு சொல்லிப் போட்டு வராமல் ஏமாத்திப் போட்டியள்!.. என்ன! பேச்சு மூச்சைக் காணவில்லை! அந்தக் குரல் பேச என் காதில் அந்தச் செய்தி பதியவே இல்லை. எனக்கு முன்னே இருந்த நிலைக் கண்ணாடியில் என் உருவத்தைப் பார்த்தேன். நல்ல வடிவாக, எடுப்பாக இருந்தது. இப்ப மற்றக் காதிலை வைச்சுக் கேப்பம் எண்டு நினைச்சு, மற்ற காதுக்கு மாற்ற என்ரை விரல் எங்கேயோ பட்டு, தொலைபேசி மூச்சிழந்தது. நான் அவசரமாக எல்லா இலக்கங்களையும் அமத்திப் பார்த்தன். அது வேலை செய்யவில்லை. வெளிச்சம் நிண்டு போச்சு. 'என்ரை வாயில்... சனியன் இது சரி வராது' என்று வந்தது. வாசலில் ஓட்டோச் சத்தம் கேட்டது. ஐயோ அப்பாவும், அம்மாவும் வந்திட்டினம் இனிமேல் கஷ்டம். இதை வைச்சிருக்க ஏலாது...! நான் அதை எடுத்துக் கொண்டு பின் வளவுக்குப் போனேன். அம்மம்மா தம்பியைப் பார்க்க வாசலுக்குப் போய் விட்டாள். நான் என்பலம் கொண்ட மட்டும் அதை பக்கத்துப் பற்றைக்குள் வீசி எறிய எண்ணி எடுத்தேன்! அது மறுபடியும் கிணுகிணுத்தது. எனக்கு எரிச்சல் வந்தது. வேகமாக அதைஎடுத்து வீசி எறிந்தேன்.. உடனடியாக வீட்டுக்குள்ளே ஓடி வந்தேன். 'நல்ல காலம் என்னை யாரும் பார்க்கவில்லை'. நான் நினைக்க வீமன் வந்து என் காலை நக்கியது. நான் ஒருவரிடமும் சொல்லமாட்டேன் என்று என்னைப் பார்த்தது. நான் அதை அன்புடன் தடவினேன். அது வாலை ஆட்டியது.

# அகநிலை மாற்றத்தின் அவசியம்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

தன்னுடைய மனித உயர்வுகளையோ அன்றி, தனித்துவங்களையோ பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலையில், இன்னமும் பல பெண்கள் உள்ளனரென்றால், இது ஒரு சமூகக் குறையாகிறது. சமூகத்தின் உயிர் நாடியாகப் பெண்களை சமூகம் தனித்துவமானவர்களாக வளர்க்கவில்லை என்பது நிச்சயமாகச் சமூகத்தின் சீரற்ற ஸ்திரத் தன்மையையே வெளிக்காட்டி நிற்கிறது.

மேற்குலகம் என்றதுமே ... 'ஐயோ அவர்களின் பண்பாடு எங்களுக்கு ஒத்துவராது' என்று கூக்குரலிடவே நம்மில் பலர் இருக்கிறோம். ஆனால், மேற்குலகிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சில விழுமியங்கள் இருக்கின்றன. ஆனால் துரதிஷ்டவசமாக மேற்குலகத்தை ஒரேயடியாக நாம் ஒதுக்கிவிடுகிறோம். பழையனவற்றைக் கழிக்கவும், புதியனவற்றைப் புகுத்தவும் இன்னமும் நாம் முழுமையாகத் தயார் நிலையிலில்லை. இரும்புச் சங்கிலியில் பிணைக்கப்பட்ட யானைக்குட்டியைப்போல விலங்குகளை வளையல்களாய் எண்ணி மகிழ்வுறும் நிலை இருக்கிறது.

'கற்பு' என்பது பெண்ணை மிகவும் பாடுபடுத்தும் ஒரு சமூகப் புற்றுநோயாகவே உள்ளது. அண்மையில் ஓர் இளம் பெண் கண்ணீர் விட்டு அழுதாள்.

'எனக்கு சரியாக ஏலாதக்கா பஸ்ஸுக்கு நிண்டன். சின்னக்காண்ர அத்தான் அதால வந்தார். எங்க எண்டு கேட்டார். ஆஸ்பத்திரிக்கு எண்டன். அதாலதான் போறன் வா எண்டு கூட்டிக் கொண்டுபோய், ஆஸ்பத்திரி வாசலிலை இறக்கிப்போட்டு வேலைக்குப் போனார்.

கொஞ்சநேரத்தால இவர் வேலையால வந்தார். சின்னக்காவிண்ர அத்தானும் நானும் ஊர்சுத்தினதாமெண்டு அறிஞ்சதாக... என்னை அடியடியெண்டு அடிச்சார். பிறகு கோவிச்சுக்கொண்டு போட்டார்... என்ர ரெண்டு பிள்ளையள் மேல சத்தியமாக்கா நான் அத்தானோட ஆஸ்பத்திரிக்குத் தானக்கா போனனான்....'

ஒரு பெண்ணின் மிகப் பெரிய துன்பமே கணவனால் சந்தேகப்படுவதுதானென உணரமுடிகிறது. இது குறிப்பிட்ட அந்த ஆண் குற்றமோ குறையோ அல்ல. சமூகத்தில் காலம் காலமாய் இருவரும் பெண்பற்றி பிரக்ஞைகள், அந்த ஆணின் மனதில் ஏற்படுத்திய விளைவே இந்தக் குடும்ப வன்முறையாய் இருக்கிறது. ஆணும், பெண்ணும் பாலியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட மனிதப் பிறவிகள் என்பதைப் புரிந்து கொள்ளாததன் விளைவும் இதுதான்.

ஒரு ஆணுக்கும், பெண்ணுக்குமான அடிப்படை உறவு பாலியல் சார்ந்ததாகவே சமூகத்தால் நோக்கப்படுகிறது. பாலியலையும், பண்பாட்டையும் ஒன்றிணைத்து மனித சமூகம் மனித உறவுகளையும், அதன் உண்மைத் தன்மைகளையும் சிக்கலாக்கிவிடுகிறது. ஆழமாகச் சொல்லப்போனால்.. பெண்களின் மீது கற்பு எனும் கவசத்தைப்போட்டு முடக்கிவிடுகின்றன. கற்பு என்பது பண்பாடு என்றும், கலாசார விழுமியம் என்றும் உரைக்கும் சமூகம் அதை ஆணை அளக்கும் கருவியாகப் பயன்படுத்துவதில்லை.

'கற்பு நிலை என்று சொல்ல வந்தார். அதை ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம்..' என்றார் பாரதி. ஆனால் கற்பு என்பது பண்பாடு என்ற பெயரால் பெண்ணை மட்டுமே அளவீடு செய்கிறது. இதனால் – சமூகத்துக்கும், ஊருக்கும், உறவுக்கும் அஞ்சுகின்ற பெண்களின் ஆளுமைகள் சிதைக்கப்படுகின்றன. ஆரிய கதாநாயகனான இராமன் முதல் இன்று சாதாரணமான சில ஆண்கள்வரை பெண்ணின் கற்பு பற்றிய ஐயப்பாடு கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

எவ்வளவு தான் முயன்றாலும், பெண் மீதான அடக்குமுறைகள் ஏதோ வடிவில் புதுப்பிறவி எடுத்துக் கொண்டு தானிருக்கின்றன. பெண் காலம் காலமாய் கண்ணீருக்கும், கவலைக்கும் உரியவளாய் இருக்கிறாள். அழகான பழத்தின் நடுவே சிறுபுழு இருப்பதுபோல, பல பெண்களின் அழகான மேன்மையடைந்த வாழ்க்கையில் ஒரு மூலையில் சிறுவேதனை அல்லது வலி இந்தப் பண்பாட்டு பெயரால் இருத்துகொண்டே இருக்கிறது.

எனக்கு வயது 30. நான் தொழில் பார்க்கிறன். என்னோட வேலை செய்யிற ஒருவர் என்னை விரும்புறனெண்டு சொன்னவர். நான் மறுத்திட்டன். ஏனெண்டா எங்கட குடும்பத்தில காதலிக்கிறதை ஆரும் ஏற்றுக் கொள்ளாயினம். எங்கட பண்பாட்டில உது சேராது... எங்கட பெரியம்மாவின்ர அக்கா காதலிச்சுக் கலியாணம் செய்தவ. அவாவை இத்தின வருஷமாகியும் எங்கட குடும்ப உறவுகள் இன்னும் ஏற்றுக் கொள்ளேல்ல .... அது தான் பயத்தில மாட்டன் எண்டனான்... ஏன் எங்கட தலைவிதிப்படி நடக்கும் தானே....'



என்னும் ஒரு பெண்ணின் எதிர்காலத்தையும் பண்பாடே நிர்மாணிக்கக் காரணியாக இருக்கிறது. தன்னுடைய வாழ்க்கையை தானே தீர்மானிக்கும் உரிமையைப் பெண்ணுக்குச் சமூகம் மறுக்கிறது. குட்டிக் குட்டித் திணிவுகளாக உருவாகும் சமுக அமைப்புகள், பெண்ணின் தலையில் பெரும் பாறாங்கல்லாய் இறங்குகின்றன.

இவையாவும் பெண்ணின் அந்தரங்கங்களையும், ஆளுமைகளையும் சிதைக்கின்றன. காலம் காலமாய் நிலவிவரும் இத்தகைய அடிப்படைகளில் மாற்றங்காணப்பட வேண்டும் என்பதே இன்றைய சிந்தனையாகும். மாற்றம் என்பது வெறுமனே புற மாற்றத்தைக் குறிக்காது. அகநிலையில் ஏற்படவேண்டும். அகநிலையில் ஏற்படும் மாற்றமே பெண்கள் மீதான அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறியும். சில விதிவிலக்கான கருத்துக்கள் நடைமுறைகள் காணப்படலாம்.

ஆனாலும், எமது மண்ணுக்குத் தேவைப்படுவது முழுமைபெற்ற அகநிலை மாற்றமே. (முற்றும்)

ஆதிலட்சுமி சிவகுமார்

# இனிமேலும் அடிமையாய் வாழ்வதைவிட்டு தலைவர் காட்டிய வழியில் நாம் நிமிர்வோம்!

## முல்லை அன்னையர் முன்னனி அறிக்கை

(முல்லைத்தீவு)

பெண் என்பவள் புதுமையான வள். எந்தப் பெரிய துயரங்களை யும் தனது இனிய பேச்சால், புன்ன கையால், அரவணைப்பால் நொடிப் பொழுதில் துடைத்தெறியச் செய் யும் ஆற்றல் மிக்கவள் என சர்வ தேச பெண்கள் தினத்தை முன் னிட்டு முல்லைத்தீவு மாவட்ட அன் னையர் முன்னணியினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

''மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டு'' மென்று கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை பாடினார். ஆனால், அதற்கு முன்னரே மாதர் தம்மை இழிவுபடுத் தும் மடமை தன்னைச் சாடினார் சுப்பிரமணிய பாரதியார். மாதவப் பயனாற்கிடைக்கப் பெற்றபெண்பிறப் புக்குரியவள், ஆதியிலே அடக்கி ஒடுக்கப்பட்டாள்.

வீட்டுக்கு வெளியே வருவதே பெரியபாவமாகக் கருதப்பட்டாள். அதனாலே உயர்கல்வி ஏன் சாதா ரண கல்வி கற்கக்கூட மறுக்கப்பட் டாள். சமூகத்திலே மற்றையவர்க ளால் குறிப்பாக புருஷர்களால் இழைக்கப்படும் அநீதிகளைக் கூட எடுத்துக்காட்டி நியாயத்தைக் கோருவதற்குக்கூட உரிமையற் றவளாக அடிமைப்படுத்தப்பட்ட காலத்திலேதான் பாரதி பெண்ணின் விடுதலைக்கு வித்திட்டான். பெண் என்பவள் அடிமையில்லை.

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, யாருக்கும் அஞ்சாத ஞானச் செருக்கும் கொண்ட புதுமைப் பெண்ணை இந்தப் பாரினிலே துணிந்து படைத்தான். பரம்பரை பரம்பரையாக அடிமைப்படுத்தப் பட்டு, பெண்கள் என்றால் அடிமை தான் என்று பெண்களே எண்ணி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என் னும் நாற்குணங்களும் தமக்கு அணி கலன் என்று முக்காடிட்டிருந்த காலத்திலேதான் நாணமும், அச்சமும், நாய்கட்கு வேண்டுமாம் என்று பாடி புரட்சிகரமான புதுமைப் பெண்ணின் படைப்பால் பெண்ணினம் மெல்ல மெல்லவிழித்துக்கொள்ளத் தொடங் கியது.

பெண் என்பவள் புதுமையான – வள்தான் எந்தப் பெரிய துயரங் களையும் தனது இனிய பேச்சால், புன்னகையால், அரவணைப்பால் நொடிப்பொழுதில் துடைத்தெறி யச் செய்யும் ஆற்றல் மிக்கவள் பெண். கணவன் எட்டு மணித்தியா லங்கள் வேலை செய்யும் போது குடும்பத் திலே மனைவி பதினெட்டு மணித்தியாலங்கள் வேலை செய்கி றாள். குடும்பத்திலே சகலரது தேவை களையும் அவளே பூர்த்திசெய்கி றாள். எல்லோரினதும் தேவைகள், குறைபாடுகள், பிரச்சினைகள், சகல துக்கும் ஈடுகொடுத்து, தேற்றி ஆறு தல் அடையச் செய்கிறாள். இத்த னைக்கும் அவளிடம் இயற்கையாய் அமைந்த புதுமைப் படைப்பு விதியே காரணம்.

மலைபோன்ற துயரத்தையும் ஒரேயொரு பாச முத்தத்தாலும், அர வணைப்பாலும், இன்சொல்லாலும், தூர விரட்டியடிக்கும் உன்னத சக்தி பெண்ணிடமே அமைந்துள்ளது.

இதிலே பெரியதோர் அதிசயம் என்னவெனில், பெண்குலமே தனது திறமையான மகத்தான சக்தியை உணராமல் இருப்பதுதான். இது ஒருபுறமும்.

மறுபுறத்தைப்புரட்டிப்பார்த்தால், அன்று பாரதியால் பெண்ணின விடு தலைக்காக இடப்பட்ட வித்து இன்று தமிழீழத்திலே பெரியதோர் விருட் சமாகி, ஆழ வேர்விட்டு அகலக் கிளை பரப்பி, முழுமைபெற்று விளங்கு வதற்கு முக்கிய சக்தியாக விளங்கு பவர் எமது தலைவர்தான் என்பதை மறுக்கவோ அன்றி, மறைக்கவோ எவராலும் முடியாது.

தமிழீழ பெண் இன்று ஆயுதத்தை ஏந்தி, பகைவர் படையணியை, எமது எல்லையிலே கால் பதிக்கவரும் எதி ரியை ஓட ஓட விரட்டுகிறாள். ஆழக் கடலிலும் ஆச்சரியப்படவைக்கும் வித்தைகளைக் காட்டி தமிழீழ மானங்காக்கத் தலை நிமிர்ந்து நிற்கிறாள். அது மட்டுமா? அரசியலில் அகில உலகமே வியக்கும் வண்ணம் உயர்ந்து நிற்கி றாள்.

தரணியெல்லாம் தன் பணிக்குச் செல்கிறாள். தமிழீழப் பெண் வீறு கொண்டெழுந்து வீர விடுதலைப் புலியாய்மாறி, தமிழினத்தைக் கூறிட எண்ணும் கொடியவர் கூட்டத்தைக் குதறிடும் துணிச்சல் பெற்ற தமிழீழப் பெண்ணால் தமிழீழத்திலேயே பிறந்த அத்தனைபேருமே பெருமைப்பட டுத் தலைநிமிர்த்திக் கொள்கின் றோம். இனியும் அடிமையாய் மற்றைய வர்களுக்குச் சுமையாய் வாழ்வதை விடுவோம், தலைவன் காட்டும் வழி யில் தலை நிமிர்வோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் 11

1571 : தினசரிப் பத்திரிகைகளில் தினமும் ஏதேனும் ஒரு விடயம்பற் றிக் கருத்துக் கட்டுரை எழுதும்முறை ஆரம்பமாகியது. "டெய்லி அட்வைசர்" என்ற தினசரியே இதனை ஆரம்பித்து வைத்தது.

1892 : மின் அடுப்பில் சமையல் செய்வது பற்றிய விளக்கம் முதன் முதலில் நியூகேஸில் அபான்டைனில் நடத்திக் காட்டப்பட்டது.

1918 : அகில உலக விமான வழித் தபால் போக்குவரத்து ஒஸ்ரியா வில் வியன்னாவுக்கும், நகருகீவ் உக்ரேனின்க்கும் இடையே தொடங்கப்பட்டது.

◈ போர்த்துக்கலில் 21 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக் குரிமை வழங்கப்பட்டது.

1938 : ஹிட்லரின் மிரட்டலுக்குப் பயந்து, ஒஸ்ரியப் பிரதம மந்திரி குஷ்ணிக் பதவி விலகினார்.

1941 : அமெரிக்க நலனை முன்னிலைப்படுத்தி, எந்த நாட்டுக்கும் போர்த்தளபாடங்களைக் கடனாகவோ, குத்தகைக்கா கவோ வழங்க வகைசெய்யும் "கடன் குத்தகைச் சட்டத்தில்" அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கையெழுத்திட்டார்.

1942 : இரண்டாம் உலகப் போரின்போது, மீண்டும் வருவேன் என்று சூளுரைத்துக்கொண்டு அமெரிக்க ஜெனரல் மக் ஆர் தர் பிலிப்பைன்ஸை விட்டு வெளியேறினார்.

1948 : இந்தியா தனது விசாக பட்டணத்திலுள்ள கப்பல் கட்டும் தளத் தில் முதன் முதலாகக் கட்டப்பட்ட "ஜல உஷா" என்ற கப்பலை மிதக்கவிட்டது.

1955 : பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்த பிரிட்டனைச்சேர்ந்த அலெக் ஸாண்டர் பிளமிங் காலமானார்.

1991 : ஈராக்குக்கு எதிரான போர் அதிகாரபூர்வமாக நிறைவு பெற்ற தாக ஐ.நா.சபை அறிவித்தது.

1993 : இந்தோனேஷிய ஜனாதிபதியாக ஆறாவது தடவையாகவும் சுகார்டடோ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1995 : பொது நலவாய தினம்.


தொகுப்பு - சந்துரு


## வலைகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட கரையோர கிராமங்களைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 2 வலைகள் வீதம் வழங்கியுள்ளது.

மேலும் 200 குடும்பங்களுக்கு வலைகள் வழங்குவதற்கான நட வடிக்கையையும் சங்கம் மேற்கொண்டுள்ளது. இதற்கான நிதியுதவியை புலம் பெயர்ந்து வாழும் மக்கள் முல்லைத்தீவு பங்குத்தந்தை ஊடாக வழங்கியுள்ளனர்.





கிளிநொச்சி கலை பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் சிறப்புத் தமிழிசை அரங்கில் கனடாவில் இருந்து வருகை தந்த புகழ் பூத்த கலைஞர் சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கத்தின் பாட்டுக் கச்சேரியை முதலாவது படத்தி லும், பொன். சுந்தரலிங்கத்துக்கு முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி அதிபர் பாலசிங்கம் பொன்னாடைபோர்த்திக் கௌரவிப்பதை இரண்டா வது படத்திலும் காணலாம். (படம் –கடம்பேஸ்)

## கண்டாவளைப் பிரதேசத்தில் புதிய நெற் களஞ்சியம் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி – கண்டாவளைப் பிரதேசத்தில் உலக தரிசனம் நிறு வனநிதியுதவியுடன் தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட நெற்களஞ்சியக் கட்டடம் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்குத் திறந்து வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வு பெரியகுளம் கமக் கார அமைப்புத் தலைவர் மகேந் திரன் தலைமையில் இடம் பெற் றது. இந்த நிகழ்வில் பொதுச் சுடர் ஏற்றபட்டதைத் தொடர்ந்து, தமிழீ ழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றி வைத்தார்.

நெற்களஞ்சிய கட்டடத்தின் பெயர்ப் பலகையை கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் நாமகள் திரை நீக்கம் செய்து வைத்தார். நெற்களஞ் சியக் கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராச நாயகம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரை களை கிளிநொச்சி மாவட்ட அர சாங்க அதிபர் இராசநாயகம், தமி ழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கருத்துரைகள் இடம் பெற்றன.




## ஆடு வழங்கல்

முல்லைத்தீவு பொருளாதார அபி விருத்தி நிறுவனத்தினரால் கெயார் எக்கோ திட்டத்தின் மூலம் முறிப்பு கிராமத்தில் 15 பயனாளிகளுக்கு தலா இரு ஆடுகள் வீதம் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு பொருளாதார அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சுரேஷ், தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பா ளர், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சி பாரதிபுரக் கிராமத்தில் அபிவிருத்தி தொடர்பான பயிற்சி

(கிளிநொச்சி)

சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள கிராமங்களின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு, பதினொரு கிரா மங்களில் சேவையாற்றிவரும் கிராமத்திட்ட அலுவலர்கள், சமூக உணர்வூட்டாளர்கள், கிராம மட்டத் திலான தொண்டர்கள் ஆகியோ ருக்கான பயிற்சிநெறிகள் தொடர் பான அமர்வு –கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் கிளி நொச்சி பாரதிபுரத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட நிகொட் திட்ட இணைப்பா ளர் ரவிகாந் தலைமையில் நடை பெற்றது. இந்த நெறிப்படுத்தல் அமர்வு நிகழ்வில், நினைவுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர வாழ்வுப் பணிப்பாளர் கெங்காதரன் நிகொட் திட்ட இணைப்பாளர் சுடர், பாரதிபுரம் சமூக பொருளாதார அபி விருத்திச்சங்கத் தலைவர் பொ.ராம லிங்கம், நிகொட் திட்ட சமூக உணர் வூட்டாளர்களுக்கான இணைப்பா ளர் றூபா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக்கொடியை பாரதிபுரம் ஊரகவளர்ச்சிப் பணிப் பாளர் அன்புமாறன் ஏற்றிவைத்து அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

இந்த அமர்வில் அவர்களுக்கான பயிற்சியை நிகொட் திட்ட இணைப் பாளர் றூபா வழங்கியதையடுத்து சுடர், கெங்காதரன், பொ.ராமலிங்கம் ஆகியோரும் சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் கிராம மக்களின் முன்னேற்றத் துக்கு எவ்வாறானஅணுகுமுறைகளைக் கொண் டிருத்தல் வேண்டு மென்றும், கூட்டுறவு முறையிலான வேலைத் திட்டச் செயற்பாடுகள் எவ்வாறு முன் னெடுக்கப்படல் வேண்டுமென் றும் விரிவாக எடுத்து விளக்கியி ருந் தார்.

இந்த நிகழ்வில் தமிழர் புனர் வாழ்வுக்கழக துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன், றீடோ நிறுவ னப் பணிப்பாளர் ஆகியோர் உட்பட சமூக ஆர்வலர்கள், சமூக உணர்வூட்டா ளர்கள், கிராமத்திட்ட அலுவலர் கள், கிராம மட்டத்திலான தொண் டர்கள் என 33 சமூக சேவையா ளர்கள் கலந்து கொண்டனர்.

## பளை – இத்தாவில் கிராமத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

(பளை)

பளை – இத்தாவில் கிராமத்தில் பளை கோட்ட அரசியற்துறையி னரின் ஏற்பாட்டில் சமகால அரசியற் கருத்தரங்கு கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு இத்தாவில் தேசிய எழுச்சிப் பேரவைச் செய லாளர் தியாகராசா தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் சம கால அரசியல் நிலை தொடர்பான கருத்துரைகளை பளை கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கரிகாலன், பளை கோட்ட தேசிய எழுச் சிப்பேரவைச் செயலாளர் புவனேந்தி ரன், பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வு இணைப்பாளர் அசோக் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ் வில் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பொது கட்டமைப்பு தொடர்பாக அரசு என்ன சொல்லப் போகிறது?

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கான முயற்சியில் மிகவும் தீவிரமான அக்கறையுடன் ஈடுபட்டு வரும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இது தொடர்பான உடன்பாடொன்று அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே விரைவில் ஏற்படும் சாத்தியமான சூழல் நெருங்கி வருவதாகத் தெரிவித்துள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து இரு மணிநேரம் வரை பேச்சுக்களை நடத்திய பின்னர் எரிக் சொல்ஹெய்ம் இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை, இந்தப் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக நோர்வேயின் சமாதான அனுசரணையாளர்கள் சமர்ப்பித்திருந்த திட்டவரைபிலுள்ள யோசனைகளை விடுதலைப் புலிகள் தரப்பினர் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், இப்போது இது குறித்த இலங்கை அரசின் சம்மதத்தைப் பெறுவதற்காக நோர்வேயின் முயற்சிகள் தொடர்வதாகவும் அறிய வந்துள்ளது.

அரசு என்று கூறும் போது, அது ஒரு தனிக்கட்சியால் உருவானதல்ல என்பதை கவனத்தில் கொண்டு பார்த்தால், அரசை அமைத்துள்ள கூட்டணியின் பங்காளிக் கட்சிகளிடையே இது தொடர்பாக ஒருமித்த, அதேசமயம் சாதகமான கருத்து நிலைப்பாடு உருவாகாமல் இந்த உடன்பாடு உருவாவதென்பது சாத்தியமாகுமா என்று சந்தேகமும் இயல்பாக எழுவது உண்மையேயாகும்.

ஆரம்பம்முதல் நோர்வேயின் சகல அமைதி முயற்சிகளையும் மூர்க்கத்தனமாக எதிர்த்துவரும் ஜே.வி.பியினர் தான் இன்றைய அரசின் பிரதான - வலிமைமிகு பங்காளிகளாக இருக்கிறார்கள் என்பதே மேற்குறித்த சந்தேகம் எழுவதற்கு மூலகாரணமுமாகும்.

இருநாட்களின் முன்னர்தான் ஜே.வி.பியின் பிரசாரச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச - இடைக்கால நிர்வாகசபை, பொதுக்கட்டமைப்பு என எது குறித்தும் அரசு - புலிகளுடன் பேசுமேயானால், தாங்கள் அரசுக்கு கொடுத்துவரும் ஆதரவுப் பலத்தை விலக்கி விடுவோம் என்று எச்சரித்துள்ளமையைக் கருத்திலெடுத்து பார்த்தால், பொதுக்கட்டமைப்புத் தொடர்பான நோர்வே அரசிடம் சமர்ப்பித்த திட்ட ஆலோசனையை நிச்சயம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

அரசாங்கம் இது தொடர்பான முடிவுகளை எடுக்கவிடாது ஜனாதிபதி சந்திரிகாவே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சுயமாக முடிவெடுத்து, நோர்வேயின் யோசனைகளை அங்கீகரிக்கும் துணிச்சலுடன் செயற்படத் தீர்மானிப்பாரா என்பதும் சந்தேகமேயாகும்.

இதேசமயம், ஜே.வி.பியினரை பொதுக்கட்டமைப்புத் தொடர்பான திட்டத்துக்கு சம்மதிக்க வைக்கும் முயற்சியை ஜனாதிபதி மேற்கொள்ளமுடியாத அளவுக்கு அவர்களுக்கிடையேயான கருத்து முரண்பாடுகள் அதிகரித்த நிலையில் உறவுகள் விரிசல் கண்டுவிட்டதும் உண்மையேயாகும்.

எனவே, ஜே.வி.பியினர் தமது இப்போதைய சமாதான முயற்சிகள், இடைக்கால நிர்வாக அதிகாரசபை, சுனாமி நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு ஆகியன தொடர்பான நிலைப்பாட்டிலிருந்து இறங்கிவருவார்களா என்பது சந்தேகமே. அப்படி இறங்கிவந்தால் அவர்கள் தென்பகுதியில் இதுவரை ஒலித்துவந்த பேரினவாத - விடுதலைப் புலி எதிர்ப்புக் கோஷம் புஸ்வாண ஒலியாகி விடும்.

ஆகவே, ஜனாதிபதி நோர்வே சமர்ப்பித்த பொதுக்கட்டமைப்பு தொடர்பாக விரைந்து சாதகமான முடிவொன்றை எடுத்து, ஆக்கபூர்வமாக செயற்படத் துணிவாரா என்பது கேள்வியேயாகும்.

அப்படி அவர் துணிவாராயின் அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பியினர் வெளியேறாது தொடர்ந்திருப்பது அவர்களின் சுயகௌரவத்தைப் பாதிக்கும் விடயமாகும்.

இந்த நிலையில், ஜே.வி.பி அரசுக்கான தனது ஆதரவை விலக்கிக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட, ஆட்சி கவிழும் அபாயம் உண்டாவது தவிர்க்க முடியாததாகி விடும்.

- ஆட்சி கவிழும் நிலை தோன்றாமல் இருக்க எதிர்க் கட்சியினரின் உதவியினை ஜனாதிபதி யாசிக்க முன்வருவாரா?

- அப்படி யாசித்தாலும் எதிர்க்கட்சியினர் அதனை வழங்க முன்வருவார்களா?


- அது சாத்தியமற்றதாகும்போது நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிடுவாரா?

- அப்படியொரு நிலை தோன்றினால் நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கும் திட்டம் என்னவாகும்?

- தேர்தல் முடிந்து புதிய அரசு பதவியேற்கும்வரை கிடப்பில் போடப்படுமா?

இவை அனைத்துக்கும் பதில், நோர்வேயின் யோசனை குறித்து ஜனாதிபதி கூறப்போகும் செய்தியில்தான் உள்ளது.

## நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# கடவுச்சீட்டு முறை இங்கும் நடைமுறைக்கு வரவேண்டுமா?

ஜே.வி.பி யின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச - ஓமந்தையைத் தாண்டி வடபதிக்குச் செல்வதானாலும், ஓமந்தையில் இலங்கை இராணுவ முகாம் சோதனைச் சாவடியில் முதலில் சோதனைக்கு உட்பட்டாக வேண்டும். அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும். பெயர் முகவரி பதியவேண்டும். எங்கிருந்து வருகின்றார் எங்கே போகின்றார் என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லிப் பதிய வேண்டும். இதன்பின் அவர் தொடர்ந்து பயணம்செய்ய அனுமதிக்கப்படுவார். தொடர்ந்து அவர் சில யார் தூரம் நடந்தோ, வாகனத்திலோ செல்லலாம். இதன் பின் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப்பகுதிக்குள் அவர் கால் வைத்ததும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியில் சோதிக்கப்படுவார். அவர் எங்கிருந்து வருகிறார், எங்கே போகப் போகிறார் என்ற விபரங்களை அந்தச் சாவடியில் கொடுக்கும் படிவத்தில் நிரப்பிக் கைச்சாத்திட்டுக் கொடுக்க வேண்டும். இவை பரிசீலனை செய்யப்பட்ட பின்பே, அவர் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார். இதே நடைமுறை மன்னார் பகுதிக்குள் நுழையும் போதும், மட்டக்களப்பு பகுதிக்குள் நுழையும் போதும், திருகோணமலைப் பகுதிக்குள் நுழையும் போதும் இருதரப்பிலும் பின்பற்றப்படும் நடைமுறை.

இலங்கையிலிருந்து - இந்தியாவுக்குச் செல்வதானால், கடவுச் சீட்டு கொழும்பிலுள்ள குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்துக்கு உரிய விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பித் திணைக்களத்திடம் ஒப்படைக்கவேண்டும். அவர்கள் அதைச் சரிபார்த்து ஏற்றுக்கொண்டபின், கடவுச் சீட்டை வழங்குவார்கள். கடவுச் சீட்டைப் பெற்றபின் இந்தியாவுக்குச் செல்ல விரும்புபவர், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இந்தியா செல்வதற்கான அனுமதியைப் பெறுவதற்கு ('விசா' என்று இது அழைக்கப்படும்) உரிய பத்திரத்தை நிரப்பி (இரண்டு சிறிய புகைப்படங்களும் இணைத்து) கொடுக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தை, விண்ணப்பதாரியுடன் விசாரித்து ஏற்றுக்கொண்டால், அவர் இந்தியாவுக்குச் செல்லும் திகதி, அவர் இந்தியாவில் தங்கியிருக்கும் காலம், அவரது கடவுச் சீட்டில் இந்தியத் தூதரக முத்திரையுடன் பொறிக்கப்பட்டு வழங்குவார்கள். இலங்கையிலிருந்து எந்த நாட்டுக்குச் செல்வதானாலும், அந்த நாட்டுத் தூதரகத்தில் இதேபோன்று விசா பெற்றால்தான், அந்த நாட்டில் ஒருவர் போய்க் கால்வைக்கலாம். விமல்வீரவன்ச வெளி நாடொன்றுக்குப் போவதானாலும், இதேபோன்று விண்ணப்பப்படிவம் நிரப்பி, விசாரிக்கப்பட்டு, அதன்பின்னரே அவர் அந்த நாட்டில் போய் இறங்குவதற்கான அனுமதி (விசா) வழங்கப்படும்.

இப்பொழுது இலங்கை அரசும், வெளிநாட்டு அரசுகளும் விசா வழங்குவதற்கான வசதிக்காகவும், பலதடவைகள் பல நாடுகளுக்குச் செல்பவர்களின் வசதிக்காகவும், சிறிய புத்தக வடிவில் கடவுச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. இந்தக் கடவுச்சீட்டுக்குரியவரின் புகைப் படமும் ஒட்டப்படுகிறது.

விசா வழங்கும் நாடும், விசாவுடன் அவரது புகைப் படத்தையும் விரும்பினால் சேர்த்துவிடுவதுமுண்டு.

இப்பொழுது ஓமந்தையைத் தாண்டி விமல் வீரவன்ச செல்வதானாலும், விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியில் சோதனைக்குட்பட்டு, உரிய பத்திரங்களை நிரப்பி விசாரிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுவார். கடவுச்சீட்டு என்ற சிறிய புத்தகம் இல்லையே தவிர, அனுமதிப் பத்திரம் நிரப்பித்தான் போகவேண்டும். ஒரு நாட்டின் எல்லையை விட்டு வேறொரு நாட்டின் எல்லைக்குள் செல்வதற்கான விதிமுறைகளே இவை!

இதைத்தான் இலங்கை அரசும், தமிழீழ நிர்வாகமும் பின்பற்றி வருகின்றன. இந்த நடைமுறையைத் தான் உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் நாகரிகமான வார்த்தைகளில் ''சண்டே ரைம்ஸ்'' என்ற வார வெளியீட்டுக்கு அளித்தபேட்டியில் தெரிவித்திருந்தார். இதுபற்றி ஜே.வி.பி. மற்றும் சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளும், ஊடகங்களும் ஓலமிட்டன. வழமைபோல ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் சொல்லுவதுபோல, பத்திரிகையாளர் திரிவுபடுத்தி விட்டார். தவறாக விளங்கிக்கொண்டதன் விளைவு என்று மறுப்புத் தெரிவித்திருக்கிறார்,

என்னதான் மறுப்புத் தெரிவித்தாலும் உண்மையை, உள்ளதை உள்ளபடியே சொல்லிவிட்டார். இதுவரை இலங்கைக்கு வந்து சென்ற வெளிநாட்டுத் தலைவர்களும், பிரதிநிதிகள் பலரும் மட்டுமல்ல, அரசுசாரா நிறுவனங்களின் பிரதிநிதிகளாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் வெளிநாட்டவர்களும், இதை நேரில் பார்த்தும், அனுபவித்துக்கொண்டும்தானிருக்கிறார்கள்.

விமல் வீரவன்ச ஓமந்தை வழியாகச் செல்வதற்குப் பயந்திருக்கலாம். பிரதமருடன் வடமராட்சிக்குப் போய்ப் பார்த்த அனுபவத்தை அவர் மறந்துவிடமுடியுமா? என்றாலும் உலக வங்கிப் பிரதிநிதிக்கு எதிராக சுவரொட்டிகள், பிரசாரம் எல்லாம் தமிழ் விரோதச் செயலாகவே மாறிவருகிறது. இதே சமயம், மீண்டும் கிழக்கில் முஸ்லிம் - தமிழ் விரோதத்தைத் தூண்டும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சுனாமி நிவாரணத்துடன், கிழக்கில் முஸ்லிம் பகுதிகளுக்குள் ஜே.வி.பி சுலபமாக ஊடுருவியுள்ள தென்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்!

தமிழீழ நிர்வாகப் பகுதிக்குள் செல்பவர்களுக்கு, இனிக் கடவுச்சீட்டு முறையைக் கொண்டு வந்தால்தான், உலக வங்கிப் பிரதிநிதி சொன்னதன் அர்த்தம் புரியுமோ?

# 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் விவசாயிகள் நிவாரணத்தில் புறக்கணிப்பு

## வாசகர் நோக்கு

சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்த 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் விவசாயிகள் - 5 ஆயிரம் ரூபா, நிவாரணம் வழங்குவதில் பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பகுதியில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

விளைநிலம் சுனாமித் தாக்கத்தால் உவர்த்தன்மையை அடைந்துள்ளது. இந்த உவர்த்தன்மை மாற்றம் அடைவதற்கு, 5-6 வருடங்கள் செல்லுமென விவசாயத் திணைக்களம் கூறுகிறது. அதற்கும் மழை செழிப்பாகப் பெய்யவேண்டும்.

சுனாமி தாக்கத்தால், வருமான இழப்பைச் சந்தித்துள்ள அனைவருக்கும் வருமானத்தை நோக்காது, நிவாரணம் வழங்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ளபோதும், பருத்தித்துறைப் பிரதேசத்தில் பாதிப்படைந்த 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் விவசாயிகளை மட்டும் புறக்கணித்துள்ளமையால், விவசாய மக்கள் பெரும்விசனம் அடைந்துள்ளனர். ஆனால், இந்தவகை நிவாரணம் தென்பகுதியில் அனைவருக்கும் வழங்கப்படும் போது, ஏன் எமக்கு மட்டும் வழங்கப்படவில்லை?

வடமராட்சி
சிவராசா.

# இந்த வார பலன்

## 11-03-2005–17-03-2005

| | | | |
|---|---|---|---|
| சந் புத | ராகு | | சனி |
| சூ.சுக் யுரே. | 12 ப.1.32 மக-செவ்<br>12 இ1-17 மே-சந்<br>14 மா 4.07 மீன-சூரி<br>15 கா 8.10 இட-சந்<br>17 மா 6.35 மிது-சந்<br>17 இ 1.32 மீன - சுக் | | |
| நெப் | | | |
| செவ் | | கேது | குரு |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப அங்கத்தவர்களிடையே நல்லுறவு வளரும். கஷ்டங்கள் குறையும். பணவருவாய் நன்றாக இருக்கும். நல்லிணக்கம், பொறுமை தெய்வபக்தி முதலியன நன்மையளிக்கும். விவாகப் பேச்சுக்கள் காலதாமதத்தின் பின் நிறைவு பெறும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவும், ஒத்துழைப்பும் கிட்டும். வருவாயும் சிறக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். முந்திய முதலீடுகள் இலாபம் தரும். தனித்தொழில் செய்வோருக்கும் இலாபம் கிடைக்கும். தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி அக்கறை கூடுதலாக இருக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிடைக்கும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் ஜனனமானவர்களுக்கு குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள், சச்சரவுகள் தோன்றும். குடும்பப் பெண்கள் நிம்மதி குறைந்து காணப்படுவர். வருமானம் இருப்பினும், செலவுகள் அதிகமாகும். தேகசுகமும் பாதிக்கக்கூடும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக வேண்டியிருக்கும். சகாக்களின் உதவியும் கிடையாமல் போகலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். தொழிலாளர்களின் ஒத்துழைப்பு குறையும். தனித்தொழில் புரிவோர் பணிநிலைக் கஷ்டத்தை எதிர்நோக்கவேண்டியிருக்கும். மாணவர்கள் உடல் அசதி, மறதி போன்றவைகளால் முன்னேற்றம் குறையும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு இந்தவாரம் நன்மை, தீமையான பலன்கள் கலந்தே காணப்படும். குடும்பத்தில் கலகலப்புகள் இருந்தாலும், இடையிடையே சச்சரவுகளும் காணும். எல்லாக் கருமங்களிலும் பொறுமை காப்பது நன்மையளிக்கும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும். இடையிடையே சிறு சுகக் குறைவுகளும் காட்டும். திருமணப் பேச்சுக்கள் முடிவின்றிக் காலந்தள்ளிப்போகும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் அதிகரிக்கும். வேலையில் சிரமங்களும் தோன்றும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். வாடிக்கையாளர்களைக் கவரக் கூடியதாகத் தொழிற்படுதல் நன்று. மாணவர்களுக்கு ஊக்கமும், கடின உழைப்பும் தேவை.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடக ராசியினருக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். மகிழ்ச்சி நிலவும். வருவாய்துறை நன்றாக இருக்கும். தேகசுகம் அதிகம் பாதிப்படையாது. பிள்ளைகளால் உதவி உண்டு. அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி நிறைவு பெறும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையில் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவும், செல்வாக்கும் கிடைக்கும். விரும்பிய வேலை மாற்றங்களும் கிட்டும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் எதிர்பார்த்த லாபத்தைக் கொடுக்கும். வாடிக்கையாளரின் வரவு அதிகரிக்கும். தனித்தொழில் நன்கு விருத்திபெறும். மாணவர்களுக்கு கல்வியில ஊக்கம் அதிகரிக்கும். உயர் கல்வி அனுகூலமாகும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் ஜனனமானவர்களுக்கு அமைதியான வாழ்க்கை நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் உதவி உண்டு. இனபந்துக்கள், நண்பர்களின் வரவு அதிகரிக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் கைகூடி, நல்வாழ்வு கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகும். அதிகாரிகளின் ஆதரவு கிட்டும். வியாபாரிகளுக்கு கருமம் சுறுசுறுப்பாக நடக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகிப் பணம்சேரும். தனித்தொழில் செய்வோர். நிகரலாபம் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அதிகமாகும். பரீட்சையில் சித்தி உண்டு.

### கன்னி


(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)



கன்னி ராசிக்காரருக்கு குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள். சச்சரவுகள் தோன்றி மறையும். வருவாயிலும் பார்க்க செலவுகள் அதிகமாகும். பல நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டியேற்படும். பிள்ளைகள், நண்பர்களின் உதவிகள் கிடையாது. இனபந்துக்களுக்குள் வாக்குவாதங்கள் ஏற்படலாம். தேகசுகம் குறைவால் மருந்துவச் செலவுகள் அதிகமாகும். திருமணப்பேச்சுக்கள் காலந்தள்ளிப்போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு, பொறுப்புகள் அதிகமாகும். செலவுகள் கூடுதலாக இருக்கும். வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் எதிர்பார்த்த லாபம் கிடையாது. வாடிக்கையாளர்களும் குறைவர். வங்கி உதவிகளும் பின்தள்ளிப்போகும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். களியாட்டங்களில் கூடுதலாக ஈடுபடுவர்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசிக்காரருக்கு இந்த வாரம் குடும்பத்தில் அமைதி குன்றும். பொறுமையாக இருந்து எல்லாவற்றையும் சமாளிக்கவேண்டும். பணவருவாய் இருந்தாலும், செலவுகளும கூடுதலாகவே இருக்கும். பிள்ளைகளின் உதவி தேவைப்பட்ட நேரத்துக்கு உதவாது. பொதுவாக நிம்மதி குறைவாக இருக்கும். இனபந்துக்களின் வரவும், அவர்களால் உதவியும் கிடைக்கும். தெய்வ வழிபாடு நன்மை தரும். திருமணப் பேச்சுக்கள் நன்மை தராது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகமாகும். அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மந்தநிலை காட்டும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தனித்தொழில் செய்வோருக்கு இலாபம் குறைவாகவே இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் குறைவாகவே இருக்கும். தேர்ச்சி திருப்தியாக அமையாது.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனு'ம், கேட்டை)*



விருச்சிக ராசியினருக்கு குடும்பத்தில் அமைதி தென்படும். பல வழிகளாலும் நன்மைகள் கிடைக்கும். பிள்ளைகளால் நற்பலன்கள் கிட்டும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். வெளிநாட்டிலிருந்து நற்செய்தி கிட்டும். பணவருவாய் திருப்தியாக இருக்கும். திருமணப் பேச்சுக்கள் நன்மையான பலனைத்தரும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். விரும்பிய இடமாற்றங்களும், தொழிற்துறையும் அமையும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் விற்பனையாகி நல்ல வருவாயைத்தரும். தனித்தொழில்களும் லாபத்தைக் கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் சந்தோஷம் ஏற்படும். இனபந்துக்களின் உறவுகள் அதிகரிக்கும். வீட்டில் குதூகலம் ஏற்படும். பெண்கள் ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் அக்கறை காட்டுவர். பணவருவாய் திருப்தியளிக்கும். விவாகம் சம்பந்தமான பேச்சுக்கள் நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் ஆர்வம் கூடுதலாக இருக்கும். அதிகாரிகளும் ஆதரவு காட்டுவர். வர்த்தகர்களுக்கு வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். பணலாபம் கிடைக்கும். தனித்தொழில் செய்வோர் நற்பலன் காண்பர். மாணவர்களுக்கு கல்வி ஆர்வம் அதிகமாகும். உயர் கல்விகற்க வாய்ப்புண்டு.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர ராசியினருக்கு குடும்ப நல்லுறவு நன்றாக இருப்பினும், இடையிடையே சச்சரவுகளும் ஏற்படும். தேக சுகக்குறைவு காட்டும். எடுத்த கருமங்கள் நிறைவேறுவதில், தாமதம் ஏற்படலாகும். இனபந்துகளின் வருகை குறைவாகவே இருக்கும். பிள்ளைகளால் உதவி கிடைப்பது கஷ்டம். திருமணப் பேச்சுக்களும் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகளுடன், அதிகாரிகளின் கெடுபிடிகளும் இருக்கும். வர்த்தகர்களுக்கு நினைததவாறு இலாபம் கிடையாது. புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்களுக்கு மறதி, விரக்தி மனப்பான்மை தோன்றும். பரீட்சையில் சித்திகள் கிடையாது.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



இந்த ராசியினருக்கு குடும்ப ஒற்றுமை, மகிழ்ச்சி வளரும். அந்நியோன்ய உறவுகள் நன்றாக அமையும். பணவருவாய் திருப்தியாக இருக்கும். கருமங்கள் தங்குதடையின்றி நிறைவுபெறும். பிள்ளைகள் உதவி புரிவார்கள். அயலவர்களுடன் ஒற்றுமை வலுக்கும். தேகசுகம் பாதிபடையாது. விவாகம் சம்பந்தமான பேச்சுக்கள் நல்ல அறிகுறியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய தொழில் மாற்றம் கிட்டும். அதிகாரிகளின் நல்லெண்ணம் வளரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். வங்கி உதவிகளும் கிடைக்க வாய்ப்புண்டு. தனித்தொழில் நன்கு வளர்ச்சியடையும். மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடைவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசிக்காரருக்கு குடும்ப நல்லுறவு இருப்பினும், இடையில் ஏதாவது சச்சரவு இருக்கும். நண்பர்கள், உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படும். பிள்ளைகளால் உதவி கிடையாது. தேகசுகம் சிறிது பாதிக்கப்படலாம். திருமணப் பேச்சுக்கள் காலதாமதத்தின்மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். வேலைப்பளுவும் கூடும். வர்த்தகர்களுக்கு குறைந்தபட்ச இலாபமே கிடைக்கும். தனித்தொழிலில் அதிக இலாபம் எதிர்பார்க்க முடியாது. மாணவர்களுக்கு ஊக்கமும், கடின முயற்சியும் தேவை.

## தவக்கால நற்சிந்தனை



'தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்' *(மத் – 10:38)*

தமக்கு ஏற்படும் துன்பங்கள், இன்னல்களைப் பொறுமை சகிப்புத் தன்மையோடு ஏற்று வாழவேண்டும். சில நேரங்களில் நாம் விட்டுக்கொடுத்தாலும், நம் வீட்டாரோடுகூட ஒப்புரவாகிவாழ முடியவில்லையே ஏன்? காரணம் தாய்– மகள், தந்தை– மகன், கணவன் – மனைவி, மாமி –மருமகள் இவர்களிடையே உண்மையான உறவில்லை. மாறாக பகையும், பொறாமை உணர்ச்சியுமே வளர்ந்துள்ளன. இயேசுவின் போதனைகளை எவ்வளவோ கேட்டும் மனந்திருந்தாது வாழ்ந்துவருவோர், எப்படி இறை இயேசுவின் சமாதானம் பெறுவர். எனவே, உறவுகளிடையே அன்பு பரவிட ஒருவருக் கொருவர் தீய எண்ணங்களை விட்டொழிப்பதன் மூலம், இயேசு தரும் உடல் நலம், மன அமைதி, நிம்மதி இவற்றை யெல்லாம் பெறுவோம். சிலுவை வழியில் வரும் துன்பங்களை நாமும் ஏற்றுக்கொண்டால்தான் மனமாற்றம் பெறமுடியும்.

மோ.தார்சீசியஸ்

பகுதி 58 சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...



யாழ். மாவட்டத்தில் எமது கட்டுப்பாட்டுச் பகுதியிலும், முல்லைத் தீவிலும் இவ்வாறான நடைமுறை தான் உண்டு. ஆனால், இங்குள்ள கிராம சேவை அலுவலர்கள் பொலிஸபதிவு கட்டாயம் தேவை எனக் கூறியுள்ளனர். இதனால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அண்மையிலுள்ள மக்கள் சிலர் பொலிஸில் பதிந்துள்ளனர். இதன் பின்னர் நாம் கிராமசேவை அலுவலர்களிடம் கட்டாயம் பொலிஸ் பதிவு தேவையென்றால் அதை நீங்களே உங்கள் தரவுகளின் அடிப்படையில் பெற்றுக் கொடுங்கள் எனக் கூறியுள்ளோம் என்றார்.

'தென்னிலங்கையில் வலைகள், படகுகள் வழங்குவதாக தொலைக் காட்சிகளில் காட்டுகிறார்களே? இங்கு அவ்வாறு ஏதாவது நடைபெற்றதா?' எனக் கேட்டதற்கு 'இங்கு அவ்வாறு அரசு இன்னமும் வழங்கவில்லை. தனிப்பட்ட நிறுவனங்கள் ஓரிரு படகுகளை வழங்கியுள்ளன. வேலூரில் பாதிக்கப்பட்டோருக்கு தனிப்பட்ட நிறுவனம் ஒன்று ஐந்து படகுகளை வழங்கியுள்ளது. இதே போல நிலாவெளியில் ஓரிரு படகுகள் வழங்கப்பட்டுள்ளன. இதைத் தவிர அரசின் உதவிகள் இதுவரை கிட்டவில்லை' எனக் குறிப்பிட்டார்.

'முஸ்லிம் மக்கள் விடயத்தில் தங்களின் அணுகுமுறை எவ்வாறிருந்தன?' எனக் கேட்டதற்கு

'தமிழ்- முஸ்லிம் உறவில் வரவேற்கத்தக்க மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. சுனாமியின் பின்னர் நாம் நேரடியாக முஸ்லிம் மக்களுக்கு சில உதவிகளை மேற்கொண்டோம். இதேபோல தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேரடியாகத் தமது தொண்டர்களை அனுப்பி பல உதவிகளைப் புரிந்துள்ளது. முஸ்லிம் பிரதிநிதிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் தொண்டர்களாகச் சேவை புரிகின்றனர். இவர்களுக் கூடாகவும் முஸ்லிம் பகுதிகளில் பாதிப்புற்றோருக்கு நிவாரணம் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நாங்களும் நேரடியாகச் சென்று உதவினோம். கிண்ணியாவில் உயிரிழந்த சுமார் முந்நூறு குடும்பத்தினருக்கும், மூதூரில் உயிரிழந்த சுமார் இருநூறு குடும்பத்தினருக்கும், உயிரிழந்தோரின் 31 ஆம் நாள் சமயச் சடங்குகளுக்காக உலர் உணவுகள் அடங்கிய பொதிகளை நான் நேரடியாகக் கொண்டு சென்று வழங்கினேன். சுனாமி ஏற்பட்ட உடனேயே நான் கிண்ணியாவுக்கும், மூதூருக்கும் சென்று அவர்களின் துயரில் பங்கெடுத்திருந்தேன். கிண்ணியாவிலும், மூதூரிலும் உயிரிழந்தோரில அநேகர் சிறுவர்களாக இருந்தனர். இக்காட்சி என்னையும் வேதனைப்பட வைத்திருந்தது.

இதேவேளை, பாதிப்புற்றோர் விடயத்தில் நிவாரணம் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் அரசினால் நீதியான முறையில் நடைபெறவில்லை என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர். இது அவர்களை விரக்தி நிலைக்குத் தள்ளியுள்ளது.

தொடர்ந்து, எமக்கிடையே நடைபெறும் சந்திப்புக்கள், தொடர்புகள் நம்பிக்கையூட்டக்கூடியவகையில் இரு பகுதியினருக்கும் அமைந்துள்ளது. நாம் இணைந்து செயற்படக் கூடிய வகையில் இரு பகுதியினரும் செயற்படுவோம் என நான் நம்புகிறேன்' என்றார்.

'சிங்கள மக்கள் விடயத்தில் என்ன மாதிரி தங்கள் நடவடிக்கைகள் இருந்தன?' எனக் கேட்டதற்கு

(தொடரும்)

# ஜார்க்கண்ட் மாநில முதல்வர் யார்?

# இன்று தெளிவான முடிவு தெரியவரும்!



ஜார்க்கண்ட் மாநில சட்டசபைக்கு நடந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை.

மொத்தம் உள்ள 81எம்.எல்.ஏக்களில் ஆட்சி அமைக்க 41 எம்.எல்.ஏக்களின் ஆதரவு தேவை. இந்த அளவுக்கு எந்தக் கட்சிக்கும் பலம் கிடைக்காததால் தொங்கு சட்டசபை ஏற்பட்டது.

பாரதீய ஜனதா - ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி 36 இடங்களில் வெற்றி பெற்றது. இந்தக் கூட்டணிக்கு 5 சுயேட் சைகள் ஆதரவு உள்ளது.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா காங்கிரஸ் கூட்டணி 26 இடங்களில் தான் வெற்றி பெற்றது. இந்தக் கூட்டணிக்கு ராஷ்டீரிய ஜனதா தளம் (7) பார்வர்ட் பிளாக் (2), தேசியவாத காங்[illegible] (1), மார்க் சிஸ்ட் லெனினிஸ்ட் (1) மற்றும் இதரகட்சிகள் (3) ஆதரவு கிடைத்துள்ளன.

இதையடுத்து ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் சிபு சோரன் ஜார்க்கண்ட் புதிய முதலமைச்சராக பதவி ஏற்றார்.

சிபுசோரன் 21 ஆம் திகதிக்குள் தனக்குள்ள பெரும்பான்மைப் பலத்தை சட்டசபையில் நிரூபிக்க வேண்டும் என்று ஆளுநர் உத்தரவிட்டிருந்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சி அமைக்க தங்களுக்கே பெரும்பான்மைப் பலம் இருப்பதாக பா.ஜ.க தலைவர்கள் ஜனாதிபதி அப்துல் கலாமை சந்தித்து முறையிட்டனர். இதையடுத்து ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் 15 ஆம் திகதிக்குள் சிபுசோரன் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

இதற்கிடையே பா.ஜ.க வினர் தங்கள் பக்கம் உள்ள 5 சுயேட்சை எம்.எல்.ஏக்கள் உட்பட 41 எம்.எல்.ஏக்களை ராஜஸ்தான் மாநிலத்துக்கு அழைத்துச்சென்று பாதுகாப்பாக வைத்தனர். அத்தோடு உயர் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்தனர்.

அதை விசாரித்த உயர் நீதிமன்றம் 11 ஆம் திகதி சிபுசோரன் தனக்குள்ள பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துக் காட்டவேண்டும் என்று அதிரடி உத்தரவு பிறப்பித்தது. இதனால் ஜார்க்கண்ட் மாநில அரசியலில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

சிபுசோரன் தன்வசம் உள்ள 40 எம்.எல்.ஏ.க்களுடன் ஒரு ஆங்கிலோ - இந்திய உறுப்பினரை நியமித்து பெரும்பான்மைப் பலத்தைக் காட்டி விடலாம் என்று நினைத்தார். ஆனால், நம்பிக்கை வாக்கெடுப்பு நடக்கும் வரை ஆங்கிலோ - இந்திய எம்.எல்.ஏயை நியமிக்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே சிபுசோரன் பக்கம் உள்ள பார்வர்ட் பிளாக் மற்றும் ஒரு கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏக்கள் அதிருப்தியில் உள்ளனர். அவர்கள் பா.ஜ.கவுக்கு ஆதரவாக அணி மாறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய காரணங்களால் சிபு சோரன் அரசு கவிழும் நிலை உருவாகியுள்ளது.

சிபுசோரன் பெரும்பான்மைப் பலத்தைக் காட்ட எந்த இடையூறும் செய்வார் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே நம்பிக்கை வாக்கெடுப்பை ஒளிநாடாவில் பதிவு செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் நம்பிக்கை வாக்கெடுப்பின்போது இடையூறு செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதிமன்றம் எச்சரித்துள்ளது. அதற்கேற்ப பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யும்படி நீதிமன்றம் ஜார்க்கண்ட் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில் பா.ஜ.க, ஐக்கிய ஜனதா தளம் மற்றும் அவர்களை ஆதரிக்கும் 5 சுயேட்சை எம்.எல்.ஏக்கள் ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து ஜார்க்கண்ட் திரும்பி, ஜார்க்கண்ட் சட்டசபை கூட்டத்தி லும் கலந்து கொண்டனர்.

இன்று நடைபெறும் நம்பிக்கை வாக்கெடுப்பில் பா.ஜ.க வெல்லும் வாய்ப்பு இருப்பதாக தெரியவந்துள்ளது. பா.ஜ.க வெற்றிபெற்றால் அர்ஜுன் முண்டா மீண்டும் முதலமைச்சராக பதவி ஏற்பார்.

உலக நோக்கு

# 230 கிலோமீற்றர் வேகத்தில் அவுஸ்ரேலியாவில் புயற்காற்று

அவுஸ்ரேலியாவின் வடகிழக்கு கடற்கரைப் பகுதியில் நேற்று - மணிக்கு 230 கிலோமீற்றர் வேகத்தில் பாரிய சக்தி வாய்ந்த புயற்காற்று வீசியது.

இதனையடுத்து புயற்காற்று தாக்கிய குயின்ஸ்லாந்து தீவில் வசிக்கும் மக்களை, பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு வானிலை ஆராய்ச்சி நிலையத்தினர் அறிவித்தனர். இதனால் தீவின் கடற்கரைப் பகுதிகளில் வசித்த மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தவேளை, இவர்கள் அனைவரையும் பாதுகாப்பான இடத்தில் அரசாங்கம் தங்கவைத்துள்ளது.

புயல் காற்று தாக்கியதால் கடல் அலை பாரியளவில் கொந்தளித்தது. இதனால் கடற்கரைப் புகுதியில் கடல் நீர் புகுந்தது. இதில் சேத விபரங்கள் ஏற்பட்டதா என்பது குறித்து எவ்வித தகவலும் உடனடியாகத் தெரியவரவில்லை.

# இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் ஜிகாத் அமைப்பின் உறுப்பினர் பலி



ஜிகாத் அமைப்பின் உறுப்பினர் ஒருவரை மேற்குக் கரையின் வடக்குப் பகுதியில் வைத்து இஸ்ரேல் படையினர் சுட்டுக்கொன்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்டவர் மொகமட் அபு ஹஸ்னே (வயது 28) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் உயிரிழந்தமையை பலஸ்தீன அதிகார சபையும் உறுதிப்படுத்தியுள்ளது.

உயிரிழந்த அபு ஹஸ்னே, கடந்த மாதம் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ்வில் அமைந்துள்ள இரவு விடுதிக்கு வெளியே நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்குத் திட்டமிட்டவர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

தமது அமைப்பின் உறுப்பினர் கொல்லப்பட்டமையானது, அண்மைக்காலமாக பலஸ்தீனத்தில் இடம் பெற்றுவரும் அமைதி நிலைமையை முடிவிற்குக் கொண்டுவருமெனவும், எனவே, இது தொடர்பாக பலஸ்தீனத் தலைவர் மஃமூட் அப்பாஸுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் ஜிகாத் அமைப்பின் தலைவர் றபீஸ் அசாம் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசங்களில், பலஸ்தீனப் படையினர் தமது கடமையைச் சரிவர செய்ய இஸ்ரேல் அனுமதிக்க வேண்டுமெனவும், இஸ்ரேல் படையினர், தாமாக நடவடிக்கைகளை மேற்கொள்வது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்குமென பலஸ்தீனத் தலைவர் அப்பாஸின் சமாதானப் பேச்சாளரான சயீப் எர்காத் தெரிவித்தார்.

இதேவேளை சுட்டுக்கொல்லப்பட்ட ஜிகாத் அமைப்பின் உறுப்பினரின் வீடும், இஸ்ரேல் படையினரால் புல்டோசர் மூலம் தகர்த்தழிக்கப்பட்டது.

# அசாமில் தொடர் குண்டுவெடிப்பு பொலிஸார் ஒருவர் உயிரிழப்பு

அசாம் மாநிலத்தில் நடந்த தொடர் குண்டுவெடிப்பில் பொலிஸார் ஒருவர் பலியானார்

அசாம் மாநில தலைநகர் கவுகாத்தில் நேற்றுமுன்தினம் மாலை விமான நிலையம், வணிக வளாகம், பொலிஸ் நிலையம், தொலைபேசி நிலையம், மின் அலுவலகம் உட்பட 9 முக்கிய இடங்களில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. இதில் ஒரு பொலிஸார் பலியானார்.

தொடர் குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து, பொதுமக்கள் வீதிகளில் அலறியடித்துக்கொண்டு ஓடினர். இதனால் கவுகாத்தி முழுவதும் பதற்றமான சூழ்நிலை உருவானது.

இது குறித்து பொலிஸார் கூறுகையில், உல்பா தீவிரவாதிகள் இந்தக் குண்டுவெடிப்பு தாக்குதலை நடத்தியுள்ளனர். ஆனால், பெரிய அளவில் உயிரிழப்பு ஏற்படவில்லை. ஒரே ஒரு பொலிஸார் மட்டும் பலியாகி உள்ளார்.

பொதுமக்களைப் பீதிப்படுத்தும் நோக்கில் சக்தி குறைந்த குண்டுகளை தீவிரவாதிகள் வெடிக்கச் செய்து நகரில் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளனர். இந்தச் சம்பவத்திற்குக் காரணமான தீவிரவாதி களை வலை வீசித்தேடி வருகிறோம் என்று தெரிவித்தனர்.

குண்டுவெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து மாநில முதல்வர் தருண் தோகாய் தலைநகரின் பாதுகாப்புக் குறித்தும் உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் இந்தச் சம்பவம் குறித்தும் அவசர ஆலோசனை நடத்தினார். இதைத் தொடர்ந்து கவுகாத்தி முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

ENGLISH CAMP 2005

J/ VEMBADI GIRLS' HIGH SCHOOL

The Inauguration Ceremony
On 11th March 2005 at 4.00 p.m
&
The Closing Session
On 12th March 2005 at 3.00 p.m

Venue: School Main Hall.

Chief Guest: Mr.P.Vigneswaran
The Zonal Director of Education
Valikamam.

Media Sponsored by: ஈழநாடு

English Union
J/ V.G.H.S

கணபதி துணை



திருநெல்வேலி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்
பூங்காவன உற்சவம்

நண்பகல் 12 மணியளவில் அன்னதானமும் மாலை 6.00 மணிக்கு வசந்தமண்டப பூசையும் இடம்பெறும். தொடர்ந்து பரிசளிப்பு விழாவும் விசேட மேளக் கச்சேரியும் சின்னமணி குழுவினரின் உல்லாச நிகழ்வும் இடம்பெறும்

மாங்கள இசை வழங்குநர்

1. செல்வகுமார் குழுவினர்
2. V.K. பஞ்சமூர்த்தி குழுவினர்
3. K.R.சுந்தரமூர்த்தி குழுவினர்
4. P.S.பாலமுருகன் குழுவினர்
5. K.R. புண்ணிய மூர்த்தி
6. N.R.S.சுதாகரன்.
7. K.நித்தியானந்தம்.

-ஆலய இளைஞர்கள்

(3892)

Mercury™
Empowering your PC




Motherboard Supports
Intel: Prescott/HT, P4, Celeron
AMD: Duron, Athlon, Sempron

ஆசியா-பசிபிக்கில் 70% சந்தையைக் கொண்டுள்ளது
இந்தியாவின் 1ஆவது மதர் போர்ட்
இலங்கை முழுவதும் பரந்த 256 முகவர் சந்தை நிலையங்களில் பராமரிப்பும் விற்பனையும்

சிறப்பு தொழில்நுட்பங்கள்
- FSB 400/533/800 MHZ
- DDR 400MHz max - 3Gb Support
- 32/64 MB onboard VGA
- 2 MB Flash Bios

மேலதிக தொழில்நுட்பங்கள்
- Intel/VIA/SIS Chipsets
- 6 channel Audio
- SATA / CNR USB Connectors

Dealer inquiries welcome. Tel: 077 213 6712

MICRO PC SYSTEMS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.021 2225893, 077 213 6712 |
| நெல்லியடி | பிரதான வீதி நெல்லியடி,(பொலிஸ் நிலையமருகில்)077 3039536 |
| கிளிநொச்சி | கணனி மையம், யாழ் சாலை, (கந்தசாமி கோவில ருகில்) கிளிநொச்சி. |
| வவுனியா | 73C, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. 024 4588339, 0777308417 |
| கொழும்பு - 06 | 15, 36வது ஒழுங்கை வெள்ளவத்தை 011-4513235,011-4516764 |
| கொழும்பு - 13 | 82, புதுச் செட்டித் தெரு, கொட்டாஞ்சேனை 011-4613617, 011-4619673 |

CORPORATE OFFICE: No.37, 37th Lane, Wellawatte, Colombo-06. Tel: 0114 510686

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மாநாட்டில்

# சமாதான முயற்சி தொடர்பாக இன்று முக்கிய தீர்மானம்!

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 14 ஆவது தேசிய மாநாட்டில் பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ள ஆலோசனையை, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொள்ளாவிடினும் இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொள்ளும் பிரேரணையை நிறைவேற்றுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை நீக்குதல், சமாதானப் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பித்தல், தேர்தல் முறையை திருத்தி அமைத்தல் போன்ற பிரேரணைகள் பலவற்றை இன்று நடைபெறும் கட்சி மாநாட்டில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தே)

## ஓட்டோ சாரதி கொலை; கண்டித்து ஹர்த்தால்!

ஓட்டமாவடியைச் சேர்ந்த ஓட்டோ சாரதி அப்துல் ஹமீட் மொகமட் ரஹீம் (வயது 30) இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று கல்குடா முஸ்லிம் பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

வாகரை கிரிமிச்சைக்கு சென்று திரும்பும் வழியில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

நேற்றைய ஹர்த்தால் போராட்டம் காரணமாக கல்குடா தொகுதியிலுள்ள வாழைச்சேனை, ஓட்டமாவடி ஆகிய பிரதேசங்களிலுள்ள கடைகள், சந்தைகள் மூடப்பட்டன.

பாடசாலைகள் அரச அலுவலகங்கள் எதுவும் இயங்கவில்லை. உள்ளூர் போக்குவரத்துச் சேவைகளும் தடைப்பட்டிருந்தன.

இதேவேளை, ஓமடியாமடு என்னும் இடத்தில் மூன்று முஸ்லிம்கள் இனந்தெரியாத நபர்களால் வெட்டி படுகொலைசெய்யப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் மாலை வதந்தி பரவியது.

இதையடுத்த தங்கள் வயல்வாடிகளில் தங்கியிருந்த முஸ்லிம்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

இந்த வதந்தி தொடர்பான தகவல் தமக்கு கிடைத்துள்ளதாகக் கூறிய வாழைச்சேனை பொலிஸார் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்தனர். பின்னர் நேற்றுக்காலை கண்காணிப்புக் குழு அந்த இடத்திற்கு நேரில் சென்று விசாரித்த போது, அது உண்மையல்ல என்பது தெரியவந்தது.

## மருத்துவபீட மாணவர்களின் போராட்டம் தொடர்கிறது!

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மூன்றாம் வருட மாணவர்கள் தமக்கான சத்திர சிகிச்சை வகுப்புக்களை மீள ஆரம்பிக்குமாறு கோரி, நடத்திவரும் விரிவுரை பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது.

மருத்துவபீட மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின் வாயிலின் முன்பும் துணை வேந்தரின் அலுவலகத்தின் முன்பும் தமது போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை, தமது போராட்டத்துக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருடன் பேசி தகுந்த தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருவதாக துணைவேந்தர் உறுதியளித்திருந்தார்.

எனவே, தமக்குத் தகுந்த தீர்வொன்றை பெற்றுத்தரும்வரை இன்றுமுதல் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரை பல்கலைக்கழகத்தினுள் செல்லவிடாது தடுக்கப் போவதாக மாணவர்கள் தெரிவித்தனர். தமது தொடர் போராட்டத்துக்கு தகுந்த தீர்வு கிடைக்காவிடின் போராட்டத்தினை விஸ்தரிக்கப் போவதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

## ஆறு ஜெட் போர் விமானங்கள் விமானப்படையிடம் கையளிப்பு!

(கொழும்பு)

பாகிஸ்தானில் மறுசீரமைக்கப்பட்ட ஆறு ஜெட் போர் விமானங்கள் - நேற்று மீளவும் இலங்கை விமானப்படையிடம் கையளிக்கப்பட்டன.

1991 ஆம் ஆண்டு சீனாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட எப்.ரி.-05, எப்.ரி.-07, எப்.ரி.எப்.-7 ஆகிய ரகங்களைச் சேர்ந்த ஜெட் போர் விமானங்கள் 2003 ஆம் ஆண்டு திருத்த வேலைகளுக்காக பாகிஸ்தானிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

800 மணிநேர பறப்புக்காலத்தைப் பூர்த்தி செய்ததால் இந்த விமானங்கள் பாகிஸ்தான் விமானப்படை பொறியியலாளர்களால் மறுசீரமைக்கப்பட்டு நேற்று இலங்கை விமானப் படையிடம் கையளிக்கப்பட்டன.

கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி எயர் சீப் மார்ஷல் கலீல் சதாத் இந்த விமானங்களை இலங்கை விமானப்படைத்தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேராவிடம் கைய ளித்தார்.

## சடலம் மீட்பு!

கொழும்பு - மருதானைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலமொன்று குப்பைத் தொட்டியிலிருந்து மீட்கப்பட்டது.

முப்பது வயதுமதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலம் இரண்டு உரப்பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக - மருதானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் லலித் கமகே தெரிவித்தார்.

இந்தச் சடலம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

## கடல் நீர் உட்புகுந்தது

(கொழும்பு)

ஹிக்கடுவ பிரதேசத்தில் நேற்று மாலை கடல்நீர் வழமைக்கு மாறாக தரையில் உட்புகுந்ததால் பொது மக்கள் பெரிதும் பதற்றமடைந்தனர்.

காலி வீதியில் பல இடங்களில் நேற்று கடல்நீர் உட்புகுந்தது. இதன்காரணமாக வாகனப் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டது.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு பின்னர் ஹிக்கடுவ பிரதேசத்தில் கடல்நீர் உட்புகுந்தது. இந்த நீர் இடம் பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள தற்காலிக கூடாரங்களிலும் புகுந்ததால் அங்கிருந்த மக்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

## நிவாரண பொருட்களுடன் வந்த ஹெலிகள் திரும்பின!

(கொழும்பு)

இரு அரசசார்பற்ற அமைப்புக்களால் சுனாமி நிவாரணப் பணிக்கெனத் தெரிவித்து கொண்டு வரப்பட்ட இரண்டு ஹெலிகளும் அந்த அமைப்புக்களால் மீளக் கொண்டு செல்லப்பட்டன.

இதில் ஒரு ஹெலி சிங்கப்பூர் விமானசேவைக்குச் சொந்தமான பொருட்களை ஏற்றும் விமானத்தில் அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநிலத்துக்கு கடந்த எட்டாம் திகதி எடுத்துச் செல்லப்பட்டதாகவும் மற்றைய ஹெலி கடந்த ஞாயிறன்று தென்னாபிரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் ஹெலிகள் இரண்டும் கடந்த இரண்டு மாத காலப்பகுதிக்கும் மேலாக கட்டுநாயக்க விமான நிலைய நிவாரண களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததன் பின்பே மீண்டும் எடுத்துச்செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தே)

## 3 இந்திய போர்க் கப்பல்கள் கொழும்பு துறைமுகம் வந்தன

இந்திய கடற்படையின் மூன்று போர்க்கப்பல்கள் நல்லெண்ண விஜயமாக நேற்று பிற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

ஐ.என்.எஸ்.கிருஷ்ணா, சுஜாதா, தரங்கினி ஆகிய கப்பல்களே இங்கு வந்துள்ளன. இவை எதிர்வரும் மார்ச் 22 ஆம் திகதி வரை இங்கு தரித்திருக்கும் எனவும் -

இக்காலப் பகுதியில் பல்வேறு உத்தியோகபூர்வ சமூக, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளில் இந்திய கடற்படையினர் பங்குகொள்வர் என்றும் இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கப்பல்கள் கேரளாவின் கொச்சின் துறைமுகத்திலிருந்தே இயங்குவதாகவும் -

தற்போது கடற்பயிற்சி பெறும் படையினருடன் இன்று கொழும்பு வந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## கட்டுநாயக்கவிலிருந்து விமானப்படைத் தளம் தம்புள்ளவுக்கு மாற்றம்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு அருகிலுள்ள விமானப்படைத் தளத்தை இடம்மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தப் பிரேரணையை அமைச்சர் மங்கள சமரவீர முன்மொழிந்தார்.

கட்டுநாயக்கவிலிருந்து அகற்றப்படும் விமானப்படைத் தளத்தை தம்புள்ளவில் நிறுவுவதற்கான தீர்மானம் இந்தக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உப குழுவை அமைப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (01)

## வயோதிப மாதுவை...

இதனால் ஆத்திரங்கொண்ட பொதுமக்கள் வில்லுமதவடி இராணுவ முகாமுக்கு முன்பாக பிற்பகல் 3.30 மணியளவில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு, தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதனையடுத்து அப்பகுதியில் பதற்றநிலை தோன்றியது.

மேற்படி வீதியூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது. கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. சம்பவ இடத்துக்கு 3.30 மணியளவில் வருகைதந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, சம்பவம் தொடர்பாக படையினரிடம் விசாரணைகளை மேற் கொண்டனர்.

எனினும், ஆவேசம் கொண்ட பொதுமக்கள் இராணுவ முகாம் மீதான முற்றுகையைத் தளர்த்தாமல் தொடர்ந்தும் மறியல் போராட்டத்தை நடத்தினர்.

பின்னர் படையினருக்கும் - பொதுமக்களுக்கும் இடையில் முறுகல்நிலை தீவிரமடைந்து முகாமுக்கு முன்பாக இருந்த காவலரணை பொதுமக்கள் தீயிட்டெரித்தனர்.

இதையடுத்து, பொதுமக்களைக் கலைக்க படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். எனினும், பொதுமக் கள் கலைந்து செல்லாமல் தமது போராட்டத்தை மாலைவரை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பெருமளவு படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

வயோதிபப் பெண் மீதான இந்த பாலியல் வல்லுறவு முயற்சியை நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனும் மற்றும் வலி. கிழக்கு கிராமிய அமைப்புக்களின் சம்மேளனமும் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளன.

## இராணுவ நெருக்கடியை...

குடாநாட்டில் இடம்பெற்ற ரோந்து நடவடிக்கைகள் தற்போது மீண்டும் இடம் பெற்றுவருகின்றன.

சுனாமி இயற்கை அனர்த்தம் ஏற்பட்டு, மக்கள் பாதிப்படைந்துள்ள நிலையில், இராணுவத்தினர் மக்களின் பொருட்களை எடுத்து புதிதாக தமது காவலரண்களை பலப்படுத்தி யுள்ளனர்.

இதைவிட யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக இராணுவ வாகனங்கள் மோதி உயிரிழப்பவர்கள், காயமடைபவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டு செல்கிறது.

படையினரின் முகமாலை சோதனைச் சாவடியில் மக்கள் மீதும் போராளிகள் மீதுமான கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

இத்தகைய இராணுவ நெருக்குவாரங்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இளம்பரிதி தெரிவித்தார்.

கண்காணிப்புக்குழுவின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு வந்த ஹொக்லண்ட், நேற்றுமுன்தினம் பலாலி படைத் தலைமையகத்தில் வைத்து - யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

இரண்டு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுமாலை கொழும்பு திரும்பிய இவர் அடுத்த வாரம் அம்பாறைக்கு விஜயம் செய்வாரென கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

## புலிகளின்...

பொறுப்பாளர் பா.நடேசன், மகளிர் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி, சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோருடன் உதவியாளர்களும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரை இவர்கள் இன்று சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விஜயத்தின் போது பின்லாந்தின் வெளிவிவகார அமைச்சர், ஜேர்மனியின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளரையும் சந்திக்கவுள்ளதாக புலித்தேவன் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரவணமுத்து நல்லம்மா

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி **சரவணமுத்து நல்லம்மா** 10.03.2005 நேற்றிரவு காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் (ஆசாரி) மனைவியும், அருணாசலம், சண்முகம், காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, மகாலிங்கம் மற்றும் கௌரியம்மா, சாந்தலிங்கம், பரமலிங்கம், பத்மநாதன், மயிலாம்பிகை, சோமசுந்தரம், நீலாம்பிகை, தயாளேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஐயனார் கோவிலடி
சுன்னாகம்
T.P 0712 – 347548

தகவல்
ச.சாந்தலிங்கம் (மகன்)
ச.பத்மநாதன் (மகன்)

## செய்தியாளர்கள் தேவை

நமது ஈழநாடு பத்திரிகையில் - பரந்தன், கண்டாவளை, விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஸ்கந்தபுரம், முழங்காவில், மல்லாவி ஆகிய இடங்களுக்கான பிரதேச செய்தியாளர்கள் தேவை.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 19.03.2005 சனிக்கிழமை காலை 10 மணிக்கு - இல 152, ஏ9 வீதி, கிளிநொச்சியிலுள்ள கிளைப்பணிமனையில் நடைபெறும் நேர்முகத்தேர்வுக்கு சமூகம் தரவும்.

**நிர்வாக இயக்குனர்**

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005 ஏப்ரல்

பிரபல ஆசிரியர்

## பௌதிகவியல் II
## Physics II

மூன்று மணித்தியாலம்
*Three hours*

01)

(a) நியூட்டனின் இரண்டாம் இயக்கவிதியைக் கூறுக.


(b) m திணிவுடைய பொருள் ஒன்று சீரான வேகம் u உடன் இயங்கிக் கொண்டிருக்கும் போது, சீரான விசை F இன் தாக்கத்தினால் அதன் வேகம் v இற்கு நேரம் t யில் மாற்றமடைகின்றது. மேற்படி தகவலின் உதவி கொண்டு F=ma என நிறுவுக.

c) 800 kg திணிவுடைய ஒரு புகையிரத எஞ்சின் 5 $ms^{-1}$ சீரான வேகத்துடன் இயங்குகிறது. புகையிரதத்தின் சில்லுகளிற்கும் தண்டவாளத்திற்கும் இடையேயான இயக்க வியல் உராய்வுக் குணகம் 0.2 ஆயின்

(i) உராய்வு விசையினைக் காண்க

(ii) எஞ்சினினால் விரயமாகும் வலுவினைக் காண்க.

d) 5 $ms^{-1}$ சீரான கதியுடன் இயங்கும் புகையிரதப் பெட்டியானது படத்தில் காட்டியவண்ணம் ஒரு நிலையான தடுப்புடன் மோதுகின்றது. மோதுகையின் காரணமாக பெட்டியினது இயக்கத்திசை மாற்றமடைகின்றது. பெட்டியில் பொருத் தப்பட்டுள்ள வில் 24 cm சுருங்கக்கூடியது.




(i) மோதுகை மீள் தன்மையுடையதாயின் புகையிரதப்பெட்டி எதிர்த்திசையில் திரும்பிச் செல்லும் வேகத்தினைக் காண்க?

(ii) வில்லின் வில்மாறிலியினைக் கணிக்குக.

(iii) மோதுகையின் போது நிலையான தடுப்பில் தாக்கும் அதிகூடிய விசையினைக் காண்க.

02.(a) டொப்பிளரின் விளைவினை விளக்குக.

b) டொப்பிளரின் விளைவினை விளக்கிக் காட்டுவதற்கு ஆய்வுகூடத்தில் உபயோகிக்கும் உபகரணத்தைப் பெயரிடுக.

(c) இவ் உபகரணத்தின் உதவிகொண்டு எவ்வாறு டொப்பிளரின் விளைவு எடு த்துக் காட்டப்படுகின்றது என்பதனை விளக்குக.

(d) f அதிர்வெண் கொண்ட ஒலி முதல் $U_s$ வேகத்துடன் ஒரு நிலையான அவதானியை நோக்கி அசைந்து, பின்னர் அவரைக் கடந்து செல்கின்றது. வளியில் ஒலியின் வேகம் V எனின், மேற்கூறிய இரு நிலைகளிலும் அவதானியினால் கேட்கும் தோற்ற அதிர்வெண் ($f_o$) இனைத் தருக.

(e) ஒலி முதல் நிலையாக இருக்கும் போது அவதானி ஒலிமுதலை நோக்கி $U_o$ வேகத்துடன் சென்று ஒலிமுதலைக் கடந்து செல்கின்றதாயின் அவதானி கேட்கும் தோற்ற அதிர்வெண் ($f_o$) இனைத் தருக.

①


②

(f) ஒரு நிலையான அவதானியை நோக்கி ஒரு மோட்டார் சைக்கிள் 72 $kmh^{-1}$ வேகத்துடன் செல்கின்றது. சைக்கிள் எஞ்சினின் ஒலியின் அதிர்வெண் 70 Hz ஆக அவனுக்குத் தோன்றுகின்றது. சைக்கிள் எஞ்சின் ஒலியின் உண்மையான அதிர்வெண்ணைக் கணிக்க. வளியில் ஒலியின் வேகம் 340 $ms^{-1}$

(g) மோட்டார் சைக்கிள் அவதானி யை விட்டு விலகிச் செல்லின் அவதானிக்கு கேட்கும் தோற்ற அதிர்வெண்ணைக் கணிக்க.

(h) டொப்பிளரின் விளைவு உபயோகமாகப் பயன்படுத்தப்படும் ஒரு சந்தர்ப்பத் தை தருக.

03) படத்தில் காட்டியவாறு 0.1m நீளமும் 1.5m விட்டமும் உடைய இரும்புச் சட்ட மும், அதேவிட்டமும் 1.5m நீளமும் உடைய செப்புச்சட்டமும் முனைக்கு முனை இணைக்கப்பட்டு, அதன் முனைகள் தவிர்ந்த பகுதி காவற்கட்டிடப்பட்டுள்ளது. அதன் ஒரு முனை கொதிநீராவி செலுத்தப்பட, அதன் மறுமுனை பனிக்கட்டி, நீர் கலவை கொண்ட பகுதி தொடுத்தப்பட்டுள்ளது. இரும்பின் வெப்பக்கடத்தாறு 75 $W\ m^{-2}\ K^{-1}$ ஆகவும் செப்பின் வெப்பக்கடத்தாறு 390 $Wm^{-2}\ K^{-1}$ ஆகவும் உள்ளது.




a) ஒவ்வொரு சட்டத்திற்கும் குறுக்கேயான வெப்பநிலைப் படித்திறன்களை $\theta_1$ இன் அடிப்படையில் எழுதுக.

(i) இரும்பு :-

(ii) செப்பு :-

b) ஒவ்வொரு சட்டத்திற்கூடாகவும் வலு இடமாற்றத்திற்கான சமன்பாடுகளை மேலே பெறப்பட்ட வெப்பநிலைப் படித்திறன்களைப் பயன்படுத்தி எழுதுக.

(i) இரும்பு :-

(ii) செப்பு :-

(c) (i) இரு உலோகங்களினூடாகவும் வலு இடமாற்றங்கள் சமனானவை. இதற்கான காரணம் என்ன.

(ii) இதற்கு எச்செய்முறை அமைப்பு இவ்வுருவமைப்பில் செய்யப்பட்டுள்ளது.

(d) (i) மேலே பெறப்பட்ட கோவைகளின் அடிப்படையில் $\theta_1$ ஐ கணிக்குக.


(ii) கோலினூடான வலுப்பாய்ச்சலைக் கணிக்குக.

(e) செப்புச் சட்டமும் இரும்புச் சட்டமும் இடமாற்றப்பட்டு வைக்கப்பட்டிருப்பின் $\theta_1$ இன் புதிய வெப்பநிலை என்ன?

(f) இவ்வுபகரண அமைப்பானது அரிதிற்கடத்திகளுக்குப் பொருத்தமானதா? காரணம் தருக.

04.(a) மின்னியக்க விசையினை வரையறுக்குக.

(b) இரு மின்கலங்கள் P யினதும் Q வினதும் மின்னியக்க விசைகளை ஒப்பிடு வதற்கு பயன்படுத்தப்படும் அழுத்தமானி அமைப்பொன்றை ஒரு காட்டு கிறது.




அழுத்தமானியினை இதற்கு உபயோகிப் பதன் முக்கிய அனுகூலத்தினை தருக.

(c) வோல்ற்றுமானியுடன் ஒப்பிடும்போது அழுத்தமானியை மேற்படி தேவைக்குப் பயன்படுத்துவதன் பிரதிகூலம் என்ன?

.................................................................................

.................................................................................

.................................................................................

(d) மாறுந்தடை R எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

.................................................................................

.................................................................................

.................................................................................

(e) பகுதி (b) யில் உள்ள அமைப்பைக் கொண்டு எவ்வாறு பரிசோதனையைச் செய் வீர் எனவும், அதில் செய்யவேண்டிய கணிப்புக்களையும் கருக்கமாகத் தருக.

.................................................................................

.................................................................................

(f) அழுத்தமானிக்கலம் $E_0$ ஆனது 4V மின்னியக்க விசையினையும் புறக்கணிக்கத்தக்க உட் தடையையும் கொண்டுள்ளது. அழுத்தமானிக் கம்பி AB யின் நீளம் 200 cm ஆகும். தடை R பூச்சியத்திற்குச் செய்யப்பட்ட நிலையில் கலம் Pயின் மின்னியக்கவிசை 2V உம் அதன் உட்தடை 1 Ωகலம். Qவின் மின்னியக்கவிசை 4V உம் உட்தடை 1 Ω உம் ஆகும். ஆளி S திறந்த நிலையில் இருக்கும் போது சமநிலை நீளத்தினைக் காண்க.

..........................................


..........................................

..........................................

..........................................

..........................................

..........................................




(g) ஆளி S மூடிய நிலையிலிருக்கும்போது சமநிலை நீளத்தினைக் காண்க.

.................................................................................

.................................................................................

# பகுதி II

கட்டுரை

விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

1. இயந்திரக் கோளாறு காரணமாக ஒரு விமானம் கடலினுள் விழுந்து கடலின் அடியில் அமிழ்கின்றது. கடலின் அடி அதன் மேற்பரப்பிலிருந்து 1500 m ஆழத்தில் உள்ளது. அடியில் உள்ள விமானத்தின் வெளிமேற்பரப்பிற்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், விமானத்தினுள் நீர் உட்புகவில்லை எனவும் கொள்க. 12 பெரிய புறக்கணிக்கத்தக்க நிறையுடைய பலூன்கள் இவ் விமானத்திற்குப் பொருத்தப்படுகின்றது. விமானத்தின் திணிவு 20,000 kg, கடல் நீரின் அடர்த்தி 1000 $kgm^{-3}$ உம், வளியமுக்கம் $10^5$ Pa உம் ஆகும்.

(a) கடல் அடியில் உள்ள நீர் நிலையியல் அமுக்கத்தினை காண்க.

(b) விமானத்தின் கண்ணாடி ஜன்னல் தாங்கக்கூடிய அதிகூடிய அமுக்கம் $2x10^6$ Pa எனின் விமானத்தின் ஜன்னல் உடைவதற்கு முன்னர் விமானம் எந்த ஆழத்திற்கு அமிழமுடியும்.

(c) விமானத்தின் ஜன்னல் உடைப்பெடுத்து விமானம் நீரினால் நிரம்பினால் விமானத்தை உயர்த்துவதற்குத் தேவையான இழிவு விசையினைக் கணிக்க. விமானம் தயாரிக்கப்பட்டுள்ள பதார்த்தங்களின் கனவளவு $5m^2$

(d) மேற்படி இழிவு விசையினால் விமானம் உயர்த்தப்படுவதற்கு 12 பலூன்களிற்குள் ளும் மொத்தமாக செலுத்தப்பட வேண்டிய வளியின் கனஅளவினைக் காண்க. வளியின் திணிவை புறக்கணிக்கவும்.

2. (a) சாதாரண செப்பஞ்செய்கையிலுள்ள கூட்டு நுணுக்குக்காட்டி ஒன்றின் பொருளியின் குவியத்தூரம் 1.25 cm உம், பார்வைத் துண்டின் குவியத்தூரம் 5.0 cm உம், கோண உருப்பெருக்கம் 30 உம் ஆகும். பொருளியின் முன்னாலும், தலைமை அச்சிற்கு செங்குத்தாகவும் பொருளொன்று உள்ளது. பொருளின் உச்சியிலிருந்து இரு கதிர்களை எடுத்து கதிர்ப்படம் வரைவதன் மூலம், கண் எவ்வாறு இப்பொருளின் விம்பத்தினை காண்கீறது எனக் காட்டுக.

(b) பெர்ருளியின் ஏக பரிமாண உருப்பெருக்கம் $m_0$ உம், பார்வைத்துண்டின் ஏக பரிமாண உருப்பெருக்கம் $m_e$ உம் ஆகும். நுணுக்குக்காட்டியின் கோண உருப்பெருக்கத்தினை $m_0$, $m_e$ ஆகியவை சார்பாகத் தருக.

c) தெளிவுப் பார்வையின் இழிவுத்தூரம் 25 cm ஆயின்

(i) பார்வைத் துண்டினதும் -

(ii) பொருளியினதும் ஏக பரிமாண உருப்பெருக்கத்தினை காண்க.

(d) பார்வைத் துண்டுக்கும் பொருளியிற்கும் இடைப்பட்ட தூரத்தினைக் காண்க.

(f) மேற்படி ஒழுங்கினை சாதாரண செப்பஞ் செய்கையில் உள்ள தொலைக் காட்டியாக உபயோகிக்க முடியுமா? தொலைக்காட்டியாக உபயோகிக்க முடியு மாயின் முன்னைய அமைப்பிற்குச் செய்ய வேண்டிய மாற்றங்களைத் தருக.

3.

(a) வெப்ப இயக்கவியலின் முதலாம் விதியைக் கூறுக. அதனைக் கோவை வடிவில் எழுதுக. பயன்படுத்திய குறியீடுகளைக் குறிக்க.

(b) வாயு ஒன்றின் நிலை சம்பந்தமாக

(i) சேறலில்லா செயன்முறை

(ii) சமவெப்பு செயன்முறை ஆகியவற்றால் யாது கருதப்படுகின்றது.

(c) இலட்சியவாயு ஒன்றைக் கருதுமிடத்து - சேறலிலா செயன்முறைக்கும், சமவெப்பு செயன்முறைக்குமான மேல் நீர் எழுதிய கோவையை எவ்வாறு மாற்றியமைப்பீர்.

(d) ஒரு குறித்த திணிவு வாயு ஒன்றின் P-V வரைபடம் அருகில் தரப்பட்டுள்ளது. வாயுத் தொகுதியானது ABCD பாதை வழியே மாற்றத்துக்குள்ளாவதைப் படம் காட்டுகிறது. AB,CD என்பன வெப்புளி முறை ஒன்றுக்கும் BC,DA என்பன சேறலிலா மாற்றத்திற்கும் உள்ளாகும் போது AB,CD என்பன முறையே 300K, 600K இல் உள்ளன. CD இற்கு கொடுக்கப்பட்ட சக்தி $\Delta Q$ =+90kj தேவைப்படுமாயின் -

(i) பாதை CD இற்கு செய்யப்பட்ட வேலை $\Delta W$ என்னவாகும்?

(ii) சக்கரம் ABCD யின் திறன் யாது?

(iii) பாதை AB யிற்கு

1. $\Delta Q$

2. $\Delta W$ என்ன


(iv) A யில் உள்ள அகச்சக்தி

UA =50kJ ஆயின்

1. $U_B$, $U_C$, $U_D$ என்ன

2. பாதை BC, DA இற்கு $\Delta Q$ கணிக்குக

(iii) பாதை BC, DA இற்கு $\Delta W$ ஐக் கணிக்குக





4.

(a) கோர்ச்சோவின் விதிகளைத் தருக.

(b) காட்டப்பட்ட மின்சுற்றில் மூன்று கலங்களினதும் உட்தடைகள் புறக்கணிக்கத்தக்கவை.

(i) ஒவ்வொரு தடையினூடும் செல்லும் மின்னோட்டங்களைக் காண்க.

(ii) 10s இற்குப் பின்னர் ஒவ்வொரு கலங்களிலும் ஏற்படும் மின்சக்தி மாற்றத்தினைக் காண்க. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மின்சக்தி மாற்றம் அதிகரிப்பா அல்லது குறைகின்றதா எனத் தருக.




(iii) 4V கலமானது ஒரு 4μF ஒடுக்கியினால் மாற்றப்படுகின்றது. ஒடுக்கியில் சேமிக்கப்படும் சக்தியினைக் கணிக்க. உமது கணிப்பினை விளக்குக.

5. (a) ஒரு அசையும் சுருள் கல்வனோமானியானது N சுற்றுக்களையும், A பரப்பளவினையும் உடைய செவ்வகச் சுருள் காந்தப்பாய அடர்த்தி B உடைய ஆரையன் காந்தப் புலத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது. சுருளினூடு I மின்னோட்டம் செல்லும்போது சுருளில் ஏற்படும் இணைக்கான கோவையினைத் தருக.

(காந்தப்புலத்தில் மின்னோட்டம் காவும் கடத்தியில் தாக்கும் விசையிற்கான கோவையினைப் பயன்படுத்தமுடியும்)

(b) சுருளானது ஒரு முறுக்கற்கம்பியினால் தொங்கவிடப்பட்டுள்ளது. C ஆனது ஓரலகு முறுக்கிற்கான இணை என்க. கல்வனோமானியின் அளவுச்சட்டம் ஏகவினமாக விருக்கும் என நிறுவுக.

(c) உபகரணத்தின் மின்னோட்டத்திற்கான உணர்திறன் எவ்வாறு அதிகரிக்க முடியும்.

(d) எல்லா விதத்திலும் ஒத்ததாகவும், ஆனால் வித்தியாசமான சுருள்களையும் கொண்ட இரு கல்வனோமானிகள் உள்ளன. ஒன்றின் சுருள் 50 சுற்றுகளையும் 10 Ω தடையையும் உடையது. மற்றையது 500 சுற்றுக்களையும் 600 Ω தடையையும் உடையது. இவ்விரு கல்வனோமானிகளும் ஒன்றன்பின் ஒன்றாக மின்னியக்கவிசை 2.5 V இம் 50 Ω உட்தடையும் உடைய கலத்திற்கு தொடுக்கப்படின் ஏற்படும் திரும்பல்களின் விகிதத்தைக் காண்க.

6. வட்டச் சுருளினால் மையத்தில் ஏற்படும் காந்தப்பாய அடர்த்தி B யிற்கான கோவையை எழுதுக. பயன்படுத்தும் குறியீடுகளையும் எழுதுக.

20 சுற்றுக்களையும் 0.15 m ஆரையுடையதுமான தட்டையான வட்டச்சுருள் கிடையாக வைக்கப்பட்டுள்ளது. சுருளினூடாக பாயும் மின்னோட்டம் 5 A ஆகும்.

(a) 5A மின்னோட்டத்தினால் மையத்தில் விளையும் காந்தப்பாய அடர்த்தியைக் காண்க.

$(\mu_0=4\pi x10^{-7})$

(b) காந்தப்பாய அடர்த்தி மேல்நோக்கி இருக்கத்தக்கதாக சுருளினூடான மின்னோட்டத்தின் திசையை வரைந்து காட்டுக.

(c) அக்குறித்த புள்ளியில் புவிக் காந்தப் பாயத்தின் கிடைக்கூறு வடக்கு நோக்கி 18μT உம் நிலைக்குத்தாக கீழ்நோக்கி 55μT ஆகும்.

இக்குறித்த கடத்தியினூடாக 5A மின்னோட்டம் பாயும் போது சுருளின் மையத்தில் உருவாகும் விளையுள் காந்தப்பாய அடர்த்தியைக் கணிக்குக.

(d) நிலைக்குத்துத்திசையில் விளையுள் காந்தப்பாய அடர்த்தி பூச்சியமாவதற்குச் சுருளினூடாக மாற்றவேண்டிய மின்னோட்டத்தின் பருமன் யாது?